# அரங்கம் செய்திகள்

தமிழ் மக்களுக்கான ஒரு தொடர்பூடகம்


வார இதழ் – இலவசம்

வெள்ளி, செப்டம்பர் 21, 2018. இதழ் - 31





## தகவல் தொடர்புக் கோபுரங்களும் பொதுமக்களும்



எம்மில் நூற்றுக்கு தொண்ணூறு சதவீதமான பொதுமக்கள் தகவல் தொடர்புக் கோபுரங்களினால் வெளிப்படும் கதிர் வீச்சின் பாதிப்பு...

பக்கம் - 05



## உளவியல் முதலுதவி

மூன்று சகாப்தகால யுத்தம், சுனாமி, இயற்கை அனர்த்தங்களுக்கு பின்னர் வடக்கு...

பக்கம் - 14



## மின்வெட்டுக்கு யார் பொறுப்பு? தெருவிளக்கு எரியவில்லையாயின் யார் பொறுப்பு?

மாநகர எல்லைக்குள் இருக்கும் மின்சார சேவைகளுக்கு யார் பொறுப்பு?

பக்கம் - 09



## திரியாய் - வான் திரிந்தாலும் தான் திரியா தமிழ் ஊர்

திருகோணமலையிலிருந்து இருபத்தொன்பது கல் தொலைவில் அமைந்த தனித் தமிழ் கிராமம். 1982

பக்கம் - 12



# கல்முனை தமிழ்ப்பிரதேசச் செயலக தரமுயர்த்தலுக்கு பெரும் அடியா?

### தமிழ் அரசியல்வாதிகள் மௌனம் : தமிழ்மக்கள் விசனம்!

இதுவரை காலமும் கல்முனை (தமிழ்) பிரதேச செயலாளர் என குறிப்பிடப்பட்டுவந்த பதவிநிலைப்பெயர் தற்போது உதவி பிரதேச செயலாளர் என மாற்றம் செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் டி.எம்.எல்.பண்டாரநாயக்கவின் எழுத்துமூல உத்தரவின் பேரில் இப்பெயர்மாற்றம் அறிவிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

இது தொடர்பில் கல்முனை தமிழ்ப்பிரதேச செயலகப்பிரிவிற்கு புதிதாக நியமிக்கப்பட்ட இலங்கை நிருவாகசேவை அதிகாரி எஸ்.ஜெகருபனிடம் கேட்டபோது இதனை மறுக்காமல், அவர் ஊர்ஜிதம் செய்தார்.

கடந்த ஒன்பது வருடகாலமாக இச்செயலகத்திற்குப் பொறுப்பாகவிருந்த இலங்கை நிருவாகசேவை அதிகாரி கே.லவநாதன், தனது பதவிநிலைப் பெயராக பிரதேசசெயலாளர் என்றே பயன்படுத்தி வந்துள்ளார். அதற்கு முன்பிருந்தவர்களும் அப்படியே பயன்படுத்தியுள்ளார்கள்.

இந்த நிலையில் தற்போது இந்த திடீர் மாற்றம் இடம்பெற்றுள்ளது.

தகவலறியும் சட்டத்தின்மூலமான கோரிக்கை ஒன்றை அடுத்து, இது குறித்த தகவல்களும், உத்தரவும் வந்திருப்பதாக சொல்லப்படுகின்றது. இந்த மாற்றம் இடம்பெற்று இரு வாரகாலத்திற்கு மேலாகின்றபோதிலும் அங்குள்ள தமிழ்

தொடர்ச்சி... (பக்கம் -02 )



# காலநிலை மாற்றம் குறித்து இலங்கைக்கு உலக வங்கி எச்சரிக்கை!

அதிகரிக்கும் வெப்பமும், மாறும் மழைவீழ்ச்சி போக்கும் இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியிலும், வாழ்க்கைத்தரத்திலும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என்று உலக வங்கியின் புதிய அறிக்கை ஒன்று எச்சரித்துள்ளது.

தெற்காசியாவில் காலநிலை மாற்றத்தால் ஏற்படக்கூடிய பாதிப்புக்கள் குறித்த இந்த அறிக்கையானது, தெற்காசியாவின் அரைவாசி மக்கள் காலநிலை மாற்றத்தால் ஏற்படும், அறுவடை வீழ்ச்சி, உழைப்பின் செயற்திறன் குறைவு, அல்லது அத்துடன் தொடர்புடைய சுகாதாரப் பிரச்சினைகள் காரணமாக பெரும் தாக்கத்தை எதிர்கொள்வார்கள் என்றும் எச்சரித்துள்ளது.

இந்த அறிக்கையின்படி இலங்கையின் வடக்கு மற்றும் வடமேற்கு பகுதிகள் அதிகபட்ச வெப்பநிலையை உணர்வதுடன் 2050 ஆம் ஆண்டளவில் மிகவும் மோசமாகவும் பாதிக்கப்படும் என்று கூறப்படுகின்றது. 2050ஆம் ஆண்டளவில் 1 முதல் 1.5 பாகை சென்றிகிரேட்டால் வெப்பம் அதிகரிக்கலாம் என்று அது கூறுகிறது.
இதனால், தெற்காசியப் பிராந்தியத்தில் வறுமை அதிகரிக்கும் என்றும் எதிர்வுகூறப்படுகிறது.

காலநிலை மாற்றத்தை உள்ளூர் வசதிகளைக் கொண்டு எதிர்கொள்வதற்கான கொள்கைகள் மற்றும் யுக்திகள் குறித்தும் இந்த அறிக்கை பரிந்துரைகளை செய்துள்ளது.

இதற்கான நடவடிக்கைகளில் இலங்கை அரசாங்கத்துடன் நெருக்கமாகச் சேர்ந்து செயற்படவும் உலக வங்கி உறுதி கூறியுள்ளது.

குறைந்த நீர்ப்பாசனத்தில் பயிர்செய்தல் உட்பட பல வழிவகைகள் குறித்தும் ஆராயப்படுவதாகவும் அந்த அறிக்கை கூறுகின்றது.

காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்கான நடவடிக்கைகளுக்கு இலங்கை அரசாங்கம் முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்றும் அது கேட்டுக்கொண்டுள்ளது.




அரங்கம் செய்திகள்


விளம்பரங்களுக்கு தொடர்பு : 071 399 909 1

arangamnews@gmail.com

No: 227 Bar Road , Batticaloa

அரங்கம் பத்திரிகை மட்டுநகரில் கிடைக்கும் இடம்





உங்கள் பிரதிக்கு முந்துங்கள் இது இலவசம்

முகவர்கள்

EAST LINK AGENCY POST OFFICE

196, திருமலை வீதி, மட்டக்களப்பு.

Hotline: +94 717 412 282

ARJUNA ADVERTISING

#19A, Baily Road, Arasady, Batticaloa.

Mob : 0777 222 489 / Tel&Fax : 065 222 6763 /mail: arjunaadds@gmail.com

Better Way For Better Life

தொடர்ச்சி...

## கல்முனை தமிழ்ப்பிரதேசச் செயலக தரமுயர்த்தலுக்கு பெரும் அடியா?

அரசியல்வாதிகள் மௌனம் சாதித்துவருவது குறித்து கல்முனை வாழ் தமிழ்மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

கல்முனை தமிழ்ப்பிரதேச செயலக தரமுயர்த்தல் விவகாரத்தை பிரதான பேசுபொருளாகக்கொண்டு தேர்தலில் வாக்கு வேட்டையாடியவர்கள் அதற்கு ஆபத்து என்று வரும்போது மௌனம் சாதிப்பதென்பது ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாதது' என்று அவர்கள் ஆத்திரப்படுகின்றனர்.

'கல்முனை தமிழ் பிரதேச செயலக தரமுயர்த்தல் விவகாரத்திற்கு விழுந்த முதல் அடியாக இச்செயற்பாட்டைக் கருதமுடியும்' என அரசியல் நோக்கர்கள் விமர்சனம் செய்கின்றனர்.

'முதலிலே பதவிநிலைப் பெயரில் ஆரம்பித்து பின்னர் படிப்படியாக செயலகத்தின் ஒவ்வொரு நிருவாகச் செயற்பாடுகளிலும் தாவக்கூடிய துரதிஸ்டநிலை தோன்றியுள்ளது. இதுவரை தமிழ்ப்பிரிவு பிரதேச செயலகம் என்றிருந்த பெயர்ப்பலகை மற்றும் கடிதத்தலைப்பு இனி உப பிரதேச செயலகம் என மாற்றம்பெற்றாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை' என அவர்கள் கூறுகின்றனர்.

30 வருட போராட்டம் போன்று கல்முனை தமிழ்ப்பிரதேச செயலக தரமுயர்த்தல் விவகாரமும் மாறிவிடுமோ என கல்முனை வாழ் தமிழ்மக்கள் அஞ்சுகின்றனர்.

'தமிழ் மக்களின் ஆபத்பாண்டவர்கள்போல் தங்களைச் சித்திரிக்கும் தமிழ்க்கட்சிகளின் தலைமைகள் இவ்விடயத்தில் என்ன சொல்லப்போகிறார்கள் என்பதை அங்குள்ள தமிழ்மக்கள் ஆவலோடு எதிர்பார்க்கின்றனர்' என விரக்தியுற்ற தமிழ்ப் பிரமுகரொருவர் தெரிவித்தார்.

## கோரளைப்பற்று தெற்கு வாகனேரி, புணானை, தரவை, வடமுனை சிறிய நீர்ப்பாசனத்திட்டத்தில் 41217 ஏக்கரில் விவசாயச் செய்கை



மட்டக்களப்பு மாவட்டத்தின் கோரளைப்பற்று தெற்கு வாகனேரி, புணானை, தரவை, வடமுனை, சிறிய நீர்ப்பாசனத்திட்டங்கள், கோரளைப்பற்று வடக்கு - கட்டுமுறிவு நீர்ப்பாசனம், மதுரங்கேணி, கிரிமிச்சை, சிறு நீர்ப்பாசனத் திட்ட பிரதேசத்தில் 2018-2019 பெரும்போகத்தில் 41217 ஏக்கரில் விவசாயச் செய்கை மேற்கொள்வது என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுதர்சினி சிறிகாந்த் தலைமையில் நடந்த இதற்கான சந்திப்பில் கோரளைப்பற்று தெற்கு பிரதேச செயலாளர் எஸ்.ராஜ்பாபு, மாவட்ட விவசாயப் பணிப்பாளர் வை.பி.இக்பால், கோரளைப்பற்று பிரதேச சபைத் தவிசாளர், கோரளைப்பற்று மத்தி பிரதேச சபைச் செயலாளர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

விவசாய, கமநல சேவைகள் மற்றும் நீர்ப்பாசனத் திணைக்கள அதிகாரிகள், கால்நடை வைத்திய அதிகாரி, பிரதேச செயலக அதிகாரிகள், வங்கிகளின் பிரதிநிதிகள் மற்றும் விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகளும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டிருந்தனர்.

விவசாயப் பிரதேசங்களின் திட்ட முகாமைத்துவக் குழுக்களில் எடுக்கப்பட்ட

தொடர்ச்சி... (பக்கம் -14 )

## கோயிலைத்தாக்கிய யானை!



நிந்தவூர் பிரதேசத்திற்குட்பட்ட மாட்டுபளை மடத்தடி மீனாட்சி அம்மனாலயம் யானைத் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளது. இச்சம்பவம் (21)அதிகாலையில் இடம்பெற்றுள்ளது.



ஆலயவளாகத்தினுள் புகுந்த யானை அங்கிருந்த களஞ்சியசாலையை தும்பிக்கையால் உடைத்துள்ளது. மேலும் அங்கிருந்த கிணற்றையும் உடைத்துச்சேதப்படுத்தியுள்ளது.

(காரைதீவு நிருபர் சகா)

## ஆரையம்பதி கடற்கரை நரசிம்மர் ஆலயம் உடைப்பு



ஆரையம்பதி கடற்கரை நரசிம்மர் ஆலயத்தின் கதவுகள் சிலை என்பன 19.09.2018 அன்று அதாவது புதன் கிழமை இரவு விசமிகளால் உடைத்து சேதமாக்கப்பட்டுள்ளன.

கடந்த பத்துவருடங்களுக்கு முன்னர் அதாவது 2008 ஜனவரி மாதம் குறித்த ஆலயத்தின் சிலைகள் சேதமாக்கப்பட்டதுடன் ஆலய கருவறையில் மாட்டுத்தலை வெட்டி வீசப்பட்டதும் அதனைத்தொடர்ந்து இன முறுகல் நிலைக்கு இப்பிரதேசம் தள்ளப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

## தூரிகையேந்தியுடன் ஓர் உரையாடல்

இந்தியாவின் புகழ்பூத்த ஓவியர் புகழேந்தியுடனான சந்திப்பு மட்டக்களப்பில் நடக்கவிருக்கின்றது.

"கா" கலை இலக்கிய வட்டம் மற்றும் அரங்கம் செய்திகள் பத்திரிகை நிறுவனம் இணைந்த ஏற்பாட்டில், மட்டக்களப்பிலுள்ள அரங்கம் பத்திரிகை கேட்போர் கூடத்தில் 22.09.2018 சனிக்கிழமை காலை 09.30 க்கு சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஆர்வமுள்ள அனைவரையும் அழைக்கின்றோம்......


## வேலையாட்கள் தேவை

மட்டக்களப்பு அரசடி பார் வீதியில் சாயிபாபா தியான நிலையத்திற்கு முன்பாக உள்ள தையல் நிலையத்திற்கு, தைக்கத் தெரிந்த பெண் பிள்ளைகள் தேவை.

தொடர்பு : 077- 4192142

## வீடு காணி விற்பனைக்கு

மட்டக்களப்பு பூம்புகார் எட்டாம் குறுக்கில் 10 பேர்ச்சஸ் உறுதிக்காணியில் அமைந்த 3 படுக்கையறைகள், குளியலறை, சமையலறை, ஹால், வழிபாட்டு அறை என்பவற்றுடனான மாடி வீடு விற்பனைக்கு உண்டு.

விலை பேசி தீர்மானிக்கலாம்.
தொடர்பு : 077 - 6031252


## ஆரையம்பதியில் திறக்கப்பட்ட நெசவு ஆலை



நலிந்த நிலையிருக்கும் நெசவுத்தொழிலை மேம்படுத்தும் முகமாக 17.09.2018 திங்கள் அன்று மட்டு மாவட்ட புடவை நெசவாளர் சங்கத்தால் ஆரையம்பதி கிழக்கு திருநீற்றுக்கேணி பகுதியில் 04 தறிகள் புதிதாக வழங்கப்பட்டு, நெசவு நிலையம் ஒன்று புதிதாக திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வானது நெசவாளர் சங்கத் தலைவர் க.யோகராசாவின் தலைமையில் நடைபெற்றது. அதிதியாக கிழக்கு மாகாண கூட்டுறவு ஆணையாளரும் கூட்டுறவுச்சங்கத்தின் பதிவாளருமான ஜனாப்.ஆ.ஊ.ஆ செரிப் மற்றும் விஷேட அதிதிகளாக மண்முனைப்பற்று பிரதேச செயலாளர் திருமதி. சத்தியானந்தி நமசிவாயம் மற்றும் பிரதேச சபை தவிசாளர் சோ. மகேந்திரலிங்கம் மற்றும் மட்டக்களப்பு கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு.மு.ஏ. தங்கவேல் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

# 'புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கான நடவடிக்கை தீவிரம்'

கிழக்கு தமிழர்களின் நலனை முன்னிட்டு அனைத்து தமிழ் கட்சிகளையும் ஒரே கூட்டமைப்பின் கீழ் போட்டியிடச் செய்வதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை எட்டும் பணிகளில் கிழக்குத் தமிழர் ஒன்றியம் மும்முரமாக ஈடுபட்டுள்ளதாக அந்த அமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட செயற்குழுத்தலைவர் பேராசிரியர் மா. செல்வராசா கூறியுள்ளார்.

தமிழ் கட்சிகளின் பார்வைக்காக இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் நகல் தற்போது அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். இது குறித்து அவர் மேலும் கூறுகையில், "எதிர்வரும் கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் கிழக்குத்தமிழர்கள் சார்பில் அதிஉச்சபட்ச ஆசனங்களைப் பெற்றுக்கொள்ளும் வகையில் அனைத்துத்தமிழ் அரசியல் கட்சிகளையும் ஒன்றிணைத்து ஒரு பொதுச்சின்னத்தின் கீழ் போட்டியிடவைக்கும் செயற்பாட்டின் முதற்கட்டமாக கிழக்குத்தமிழர் ஒன்றியம் அனைத்துத்தமிழ் அரசியல் கட்சிகளையும் தனித்தனியே சந்தித்து பேசியது. அதன் அடுத்தகட்டமாக கடந்த 22.08.2018 அன்று அனைத்துத்தமிழ் அரசியல்கட்சிகளையும் களுவாஞ்சிக்குடி இராசமாணிக்கம் மண்டபத்தில் ஒரிடத்தில் சந்திக்கச்செய்து கலந்துரையாடினோம். இக்கலந்துரையாடல் சந்திப்பில் தீர்மானத்திற்கமைய கிழக்குத்தமிழர் ஒன்றியத்தினால் தயாரிக்கப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் நகல் வடிவம் அனைத்துத்தமிழ் அரசியல் கட்சிகளுக்கும் சென்றவாரம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. கட்சிகளின் பின்னூட்டல்களையும், இறுதி நிலைப்பாடுகளையும் அறியத்தருமாறு கேட்டிருக்கின்றோம்.

அவற்றிற்கு அமைய பொதுச்சின்னத்தின் கீழ் ஒன்றிணையச் சம்மதிக்கும் கட்சிகளையும் அரசியல் கூட்டு அமைப்பின் கீழ் ஒன்றிணைத்துப் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று சம்பந்தப்பட்ட கட்சிகளினால் கைச்சாத்திடப்பட்டபின் அடுத்தகட்ட நடவடிக்கைகளுக்காகத் தேர்தல் ஆணைக்குழுவிடம் செல்லவிருக்கின்றோம்' என்றார் அவர்.

# படுவான் திசையில்

பக்க அனுசரணையாளர்:
அலையப்போடி நல்லரத்தினம்(அதிபர்)
அறிவாலயம் பவுண்டேசன்



'மண்முனை தென்மேற்கு பிரதேசத்தில் துறைசார் பாடசாலைகள் அமைப்பது சாத்தியமாகுமா?, அமைந்தால் நல்லதுதான்' என மகிழடித்தீவு சந்தியில் நின்று வேலுப்பிள்ளையும் சிவநேசனும் பேசிக்கொண்டனர்.

மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்திற்குட்பட்ட, மண்முனை தென்மேற்கு பிரதேசத்தில், துறைசார் பாடசாலைகளை உருவாக்குவதற்கான முன்மொழிவொன்று, முதலைக்குடா மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற, வாழ்க்கைக்கான தொழில் வழிகாட்டல் கண்காட்சியின் போது, மையம் 6இன் ஊடாக முன்மொழியப்பட்டிருந்தது. இதனை பார்வையிட்டதன் பின்பே வேலுப்பிள்ளையும், சிவநேசனும் மகிழடித்தீவு சந்தியில் நின்றுகொண்டு, தங்களுக்குள்ளே உரையாடிக்கொண்டனர்.

மண்முனை தென்மேற்கு பிரதேசத்தில் முனைக்காடு, முதலைக்குடா, மகிழடித்தீவு, கொக்கட்டிச்சோலை, அரசடித்தீவு, அம்பிளாந்துறை ஆகிய கிராமங்களில் மகா வித்தியாலயங்கள் அமையப்பெற்று உயர்தரப்பிரிவுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இங்கு அம்பிளாந்துறை கலைமகள் வித்தியாலயத்திலும், முதலைக்குடா மகா வித்தியாலயத்திலும் கணித, விஞ்ஞானப் பிரிவுகளும் உள்ளன. ஏனைய பாடசாலைகளில் கலை, வர்த்தகம் ஆகிய பிரிவுகளே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஆரம்பத்தில் மண்முனை தென்மேற்கு, மண்முனை மேற்கு பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் உயர்தரத்தினை மண்முனை தென்மேற்கு பிரதேசத்தில் முதலைக்குடா மகா வித்தியாலயத்திலே கற்றனர். பின் அரசடித்தீவு, அம்பிளாந்துறை ஆகிய கிராமங்களில் அமைக்கப்பட்டதுடன், தமது, தமது கிராமங்களிலே தமது மாணவர்கள் கற்க வேண்டும். தமது பாடசாலைகள் வளர்ச்சியடைய வேண்டுமென்ற சமூகத்தின் விருப்பினாலும், முயற்சிகளினாலும் உயர்தரப்பிரிவுகள் முனைக்காடு, மகிழடித்தீவு, கொக்கட்டிச்சோலை ஆகிய பாடசாலைகளிலும் ஆரம்பிக்கப்பட்டு, தற்போது, இப்பாடசாலைகளும் மகா வித்தியாலயங்களாக திகழ்கின்றன.

தமது கிராமங்களில் உயர்தரப்பிரிவுகள் ஆரம்பிக்கப்பட்டதன் பயனாக, அயலில் உள்ள பாடசாலைக்கு செல்வதற்கான தூரத்தினை கட்டுப்படுத்த முடிந்ததாக மாணவர்களும், பெற்றோரும் பேசிக்கொண்டாலும், பதின்மூன்று வருடங்களும் ஒரே சகபாடிகளுடன் கற்க வேண்டிய நிலைக்கும் உள்ளாகின்றனர். இது இவ்வாறு இருக்க, துறைசார் பாடசாலைகள் அமைக்கப்படுவதன் ஊடாக, குறித்த பாடத்திற்கு போதுமான ஆசிரியர் வளம் காணப்படும். அனைத்து பாட ஆசிரியர்களும் உள்ளதனால் விருப்பமுடான கற்றல், கற்பித்தல் நடைபெறும். தமக்கு விரும்பிய பாடத்தினை தெரிவு செய்யும் வாய்ப்பு அதிகமாக காணப்படும். விரும்பும் பாடத்திற்கு அனைத்து பௌதீகவளங்களும் காணப்படக்கூடியதாக அமையும். பல்கலைக்கழகத்துடன் குறிப்பிட்ட பாடங்களுக்கு இணையான தொடர்பினை ஏற்படுத்தக்கூடிய வாய்ப்பு கிடைக்கும். அரசசார்பற்ற நிறுவனம், அரசாங்கம் குறிப்பிட்ட நிதியை அப்பாடசாலைகளுக்கு ஒதுக்கக்கூடியதாக இருக்கும். விருப்பத்துக்குரிய பாடத்தினை தெரிவு செய்யக்கூடியதாக இருப்பதினால் மாணவர்கள் பாடசாலையை நேசிக்கக்கூடியதாக அமையும். மாணவர் எண்ணிக்கை அதிகமாக இருப்பதினால் அவர்களுக்கிடையில் போட்டித்தன்மை அதிகரிக்கும். மாணவர்களுடையில் கருத்துப்பரிமாற்றம் மற்றும் கலந்துரையாடல் நடைபெறுவதன் மூலம் கற்பதற்கு உதவியாக இருக்கும், மாணவர் - மாணவர் இடைத்தொடர்பு அதிகரிக்கும், மாணவர்களிடையே தன்னம்பிக்கை வளரும், மேலதிக வகுப்புக்குரிய தேவை காணப்படாது, மேலதிக வகுப்புக்கான பணம் சேமிக்கப்படும், சமூக ஒற்றுமை வளரும், பெற்றோர் - பெற்றோர் இடைத்தொடர்பு அதிகரிக்கும். போன்ற பல நன்மைகளை தாங்கிய பதாதை துறைசார் பாடசாலைகளின் முன்மொழிவின் போது காட்சிப்படுத்தப்பட்டிருந்ததாக வேலுப்பிள்ளைக் குறிப்பிட்டார்.

மாணவர்கள் முன் நின்று பார்க்கின்ற வேளை, துறைசார் பாடசாலைகள் மிக

**படுவான் பாலகன்**

அவசியமானதாக பார்க்கப்பட்டாலும், சமூகம் முன் நின்று பார்க்கின்ற போது, தமது கிராமப்பாடசாலைகள், உயர்பாடசாலைகளாகவும், அனைத்து வசதிகளைக் கொண்டதாகவே, அமைய வேண்டும் என்ற எண்ணம் அவர்கள் மத்தியில் உருவாகியிருக்கின்றது. அவ்வெண்ணம் தவறென்று கூறிவிடவும் முடியாது. ஆனால், உயர்தரப்பிரிவுகளுக்குள் உள்ள அனைத்து துறைகளையும் ஒவ்வொரு பாடசாலையிலும் ஆரம்பிப்பதினால், மாணவர்கள் உச்சப்பயனைப்பெறுவார்கள் என்பது சாத்தியமற்றது. குறிப்பாக, உயர்தரப்பிரிவுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள அனைத்து பாடசாலைகளிலும், ஒரு துறைக்கான அனைத்து பாடங்களும், அப்பாடசாலைகளில் ஆரம்பிக்கப்படவில்லை. அங்கு, ஒருசில பாடங்கள் மாத்திரமே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதற்கு, போதியளவிலான ஆசிரியர் வளம் இன்மை காரணமாகின்றது. இதனால் மாணவர்களின் விருப்பிற்கு அப்பால், சமூகத்தின் விருப்பத்திற்கு அல்லது பாடசாலையின் விருப்பத்திற்கு, பாடங்களை கற்க வேண்டிய நிலையும் மாணவர்களுக்கு உள்ளது. இதனால் விருப்பமில்லாத பாடத்தினை கற்று அதில், தேர்ச்சியடைய முடியாதவர்களாகவும் மாணவர்கள் உருவாகின்றர். அனைத்து பாடசாலைகளிலும், எல்லாத்துறைக்குமான, அனைத்துப் பாடங்களும் ஆரம்பிக்கப்பட்டால் துறைசார் பாடசாலைகள் தேவையற்றுப்போகலாம். ஆனாலும் மாணவர்களின் எண்ணிக்கையும் கவனத்தில் கொள்ளப்பட்டே ஆசிரியர் நியமனமும் அமையும் என்பதினால், துறைசார் பாடசாலைகளின் தேவை இங்கு மேலோங்குகின்றது. என சிவநேசனும் கூறிக்கொண்டார்.

மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்தில், வலயக்கல்விப் பணிப்பாளராக முன்னர் பணியாற்றிய க.பாஸ்கரன், துறைசார் பாடசாலையை மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்தில் ஆரம்பிப்பதற்கு எண்ணிய போதும், அதற்கான சந்தர்ப்பத்தினை சமூகம் வழங்கவில்லை. என்ற கருத்தை கண்காட்சியின் போது, கூறியதாக ஞாபகப்படுத்திய வேலுப்பிள்ளை. சமூகத்தின் விரும்பினாலே துறைசார் பாடசாலையினை உருவாக்க முடியும். இதற்கு சமூகம் ஒத்துழைப்பு வழங்குமா? என்பதே சந்தேகமான விடயமாகும். மாணவர்களின் நன்மைக்காக மேற்கொள்ளப்படும் அனைத்து விடயங்களுக்கும் நான் உறுதுணையாக நிற்பேன் எனக்கூறிவிட்டு, வேலுப்பிள்ளையும் அவ்விடத்தினைவிட்டு அகன்றான்.

# அபிவிருத்திக்காக ஏங்கும் திருக்கோவில் ஆதார வைத்தியசாலை!




நூற்றாண்டுகாலம் பழமைவாய்ந்த திருக்கோவில் ஆதார வைத்தியசாலை இன்று அபிவிருத்திக்காக ஏங்கி நிற்கின்றது. அம்பாறை மாவட்ட கரையோரத்தில் தென்கோடியிலே அமைந்துள்ள திருக்கோவில் தமிழர் கிராமத்தில் இவ் வவைத்தியசாலை அமைந்துள்ளது.

தம்பட்டை தொடக்கம் கோமாரி வரையுள்ள பிரதேசத்தில் வாழும் சுமார் 40,000 குடிமக்களுக்கு சுகாதார வசதியை வழங்குகின்ற ஒரேயொரு வைத்தியசாலை இதுவாகும்.

இது கிழக்குமாகாண சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் நிருவகிக்கப்படுகின்றது.

இவ் வைத்தியசாலை பலரின் முயற்சியால் இவ்வருட ஆரம்பத்தில் ஆதாரவைத்தியசாலையாக தரமுயர்த்தப்பட்டது. அதனைத்தொடர்ந்து அங்கு சுகாதார அமைச்சர் நேரடியாக விஜயம் செய்து, அவசர சிகிச்சைப்பிரிவை தற்காலிகமாகத் திறந்துவைத்தார்.

மறுமுறை விஜயம்செய்து 3 கோடிரூபா செலவில் நிருமாணிக்கப்படவுள்ள 2மாடி விடுதிகட்டடத் தொகுதிக்கான அடிக்கல்லை நட்டுவைத்தார்.

ஆனால் அந்த நோக்கம் நிறைவேறவில்லை என்பது அங்குள்ள குறைபாடாகும்.

இத்தனைக்கும் அம்பாறை மாவட்டத்திற்கு இதுவரை தெரிவான தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஏதோ ஒருவகையில் திருக்கோவிலைச் சார்ந்தவர்களாகவிருந்தும் இவ்வைத்தியசாலை இந்த நிலையிலிருக்கின்றதென்றால் அதற்கு என்ன காரணம்? என்பது ஆய்வுக்குரிய விடயமாகும்.

பொதுமக்களின் சுட்டுவிரல் அவர்களை நோக்கியும் நீளுகின்றது என்பதையும் மறுக்கமுடியாது.

திருக்கோவில் பிரதேசபைத் தவிசாளர் இ.வி. கமலராஜன் கூறுகையில்: 'மிகப்பழைமை வாய்ந்த இவ்வைத்தியசாலையில் இரத்தவங்கியோ சத்திரசிகிச்சைக்கூடமோ இல்லை.

மேலும் இங்கு ஒரு பிணவறை உண்டு. ஆனால் குளிரூட்டி இல்லாமையினால் பிரேதத்தை வைக்கமுடியாத நிலையுள்ளது. பெயருக்கு ஆதாரவைத்தியசாலையாக தரமுயர்த்துவதில் அர்த்தமில்லை. உண்மையில் ஆளணி முகாமைத்து வத்திட்டப்படி 16 வைத்தியர்கள் இருக்கவேண்டும். ஆனால் இன்றிருப்பதோ 5 வைத்தியர்கள் மாத்திரமே.' என்றார்.

எக்ஸ்ரே இயந்திரம் அண்மையில் கிடைத்துள்ளது.

சத்திரசிகிச்சைக்கூடத்தின் உபகரணங்களுக்கென அமைச்சர் மனோகணேசன் 2 கோடி 6 0லட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளதாக ஊடகங்களில் காணமுடிந்தது. இருந்தும் அதற்கான கட்டடத்திற்கு மேலும் 3 கோடிரூபா தேவையாகின்றது.

கடந்த 13ஆம் திகதி அம்பாறையில் இடம்பெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் இடம்பெற்ற அமளிதுமளியையடுத்து அப்பிரச்சினையை முடிவுக்கு கொண்டுவருமுகமாக அமைச்சர் தயாகமகே அந்த 3 கோடி ரூபா நிதியை தான் ஒதுக்குவதாக கூறியுள்ளார்.

அங்கு இணைத்தலைவரான எம்.எஸ். உதுமாலெவ்வை குரல்கொடுக்கையில் 'இது எமது பிரதேச வைத்தியசாலை. அக்கரைப்பற்று, திருக்கோவில், பொத்துவில் பிரதேச மக்களுக்கு மத்தியிலிருக்கும் முக்கிய வைத்தியசாலை. அந்த தமிழ்மக்களுக்கு சுகாதாரவசதி வேண்டும். ஆனால் அங்கு அடிக்கல்லை நட்டுவைத்து ஒன்றுமே நடக்கவில்லையெனக் கூறப்பட்டது. அதற்கு உரிய பதில் அளிப்பது மட்டுமன்றி உரிய தீர்வையும் வழங்கவேண்டும்' என்றார்.

திருக்கோவில் பிரதேச செயலாளர் சிவ.ஜெகராஜனைக் கேட்டபோது

'திருக்கோவில் வைத்தியசாலை அண்மையில்தான் ஆதார

தொடர்ச்சி... (பக்கம் -15 )

# சின்னாகலட்டி டெலே – ஓர் ஆணவம் அழிந்த கதை


பழைய இடச்சு இலங்கை வரைபடமொன்றில் கிழக்குக் கரையில் முனைப்பாகக் குறிப்பிடப்பட்டிருந்த இடங்களில் ஒன்று, ஊாலையெஉயடயவவந னநடடந. சொல்லிப்பார்த்தால் சின்னாகலட்டே டெல்லே என்றோ சின்னச்சலட்டே டெல்லே என்றோ ஒலித்தது. இன்னொரு இடச்சு வரைபடத்தில் அதே பெயரில் அமைந்திருந்த இடச்சுக் கோட்டை ஒன்றின் படம் சித்தரிக்கப்பட்டிருந்தது.

கண்டி அரசு, 1672இல் இக்கோட்டை மீது படையெடுத்திருக்கிறது என்ற செய்தியை இன்னொரு குறிப்பு சொல்லியது. ஆக, அந்த இடம், ஏதோ ஒருவிதத்தில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது என்பது புரிந்தது. ஆனால் நிச்சயமாக அந்த ஊரின் இன்றைய பெயர் அது இல்லை. அந்தப் பெயரில் எந்தவொரு ஊரும் கிழக்கில் இன்று அழைக்கப்படவில்லை. அந்த இடம் எது? தேடுதல் வேட்டை தொடங்கியது.

மேலே நாம் பார்க்கும் 17ஆம் நூற்றாண்டு வரைபடத்தில், அந்த இடத்துக்கு அருகே கல்முனை (Calmoene), பாண்டிருப்பு (Panderipoe) ஆகிய ஊர்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. எனவே அந்த ஊர் இன்றைய கல்முனைக்கு அத்தனை தூரத்தில் இருந்திருக்கமுடியாது. கிழக்கிலங்கை என்பதால் நிச்சயமாக அது தமிழ்க்கிராமம் தான். “கின்னா”, “கலட்டி”, “டெல்லே”, “சின்னா”, “சலட்டே”, “டெல்” இந்தச் சொற்கள், அல்லது இவற்றை ஒத்த தமிழ்ச்சொற்கள் ஏதாவது ஒலிக்கும் ஊர்கள் கல்முனைக்கு அருகில் இருக்கின்றனவா?

Chinnacalatte delle...... “சின்ன” என்ற சொல் கவனத்தை ஈர்க்கிறதே? “சின்ன” என்று தொடங்கும் ஊர்கள் ஏதாவது? ஊகூம். அப்படி ஒன்றும் அந்தப்பக்கம் இல்லை. சரி. மாறி யோசித்துப் பார்ப்போம் ‘சின்ன’ இருந்தால் பக்கத்தில் ‘பெரிசு’ ஏதாவது இருக்கவேண்டும். “பெரிய” என்று தொடங்கும் ஊர்கள் ஏதாவது? ”பெரிய நீலாவணை” இருக்கிறது. பக்கத்தில் ”துறைநீலாவணை”யும் இருக்கிறது. ஒருவேளை துறைநீலாவணையாக இருக்குமோ?

சின்னநீலாவணை.... Chinnacalatte.... ம்ம்… ஒலிப்பு ஒத்துவரவில்லையே. அது ஒருபக்கம் இருக்கட்டும், வேறேதாவது பெரிசு...? ஓ! “பெரிய கல்லாறு” இருக்கிறது. பக்கத்தில் “கோட்டைக்கல்லாறு”! சொல்லிப்பார்ப்போம் Cinnacalatte.. சின்னக்கல்லாற்று….! அட, அதேதான்! “delle” என்ற சொல் புரியவில்லை. “தலை” என்றோ “தாழை” என்றோ சொல்லிப்பார்த்தால் ஒலிப்பு



சந்தேகத்துக்கு இடமின்றி ஒத்துப்போகிறது. Cinnacalatte delle… சின்னக்கல்லாற்று தலை/தாழை.

கண்டி அரசிடமிருந்து கீழைக்கரையை ஆக்கிரமித்த போர்த்துக்கேயர் புலியன்தீவிலிருந்து (இன்றைய மட்டுநகர்) காத்தான்குடி வரையான சிறு நிலப்பரப்பை மாத்திரமே தங்கள் ஆதிக்கத்தில் வைத்திருந்தார்கள். அவர்களின் கோட்டையை 1638இல் கைப்பற்றிய ஒல்லாந்தர் ஏனைய மட்டக்களப்பின் பகுதிகளுக்கும் தங்கள் ஆட்சியை விரிவுபடுத்தினர். மட்டக்களப்புத் தேசத்தின் மத்தியில் போரைதீவுப்பற்று, எருவிற்பற்று, கரைவாகுப்பற்று ஆகிய மூன்று பிரிவுகளுக்கும் மத்தியில், மட்டக்களப்பு வாவியின் முகத்துவாரங்களை ஒட்டி இருந்த

வி.துலாஞ்சனன்

சிறுதீவான சின்னக்கல்லாறு முக்கியமான புவியியல் அமைவைப் பெற்றிருந்தது. அங்கு ஒல்லாந்தர்கள் கோட்டை ஒன்று கட்டிக்கொண்டார்கள். வேறு காரணங்களால் 1680களில் மட்டக்களப்பின் தலைநகரை புளியந்தீவிலிருந்து காரைதீவுக்கு மாற்றும் முயற்சி மேற்கொள்ளப்பட்ட போது, சின்னக்கல்லாற்றுத் தலையிலிருந்த ஒல்லாந்து வீரர்களை காரைதீவுக்கு வரவழைப்பது என்ற முடிவும் எடுக்கப்பட்டிருக்கிறது. (அது செயலாக்கம் பெறவில்லை)

ஒல்லாந்தரின் கோட்டை அமைந்திருந்த இந்த சின்னக்கல்லாறு பின்னாளில் கோட்டைக்கல்லாறு ஆனது. இன்று அங்கு கோட்டை எதுவும் இல்லை. எனினும் கோட்டையொன்று இருந்ததன் அடையாளமாக ”கோட்டைவாசல் வீதி” என்ற பெயர் இன்றும் அங்கு வழக்கத்தில் உள்ளது.

கோட்டைக்கல்லாற்றில் இன்றும் உள்ள கோட்டைவாசல் வீதி.

இதையெல்லாம் நுணுகி ஆராய்ந்தபின், எனக்கோ பெருமை பிடிபடவில்லை. முக்கியமான வரலாற்றுத் துருப்பைக் கண்டுபிடித்த பெருமிதம். வரலாற்றில் மறைந்த ஒரு ஊரைத் தோண்டிக் கண்டறிந்த பேரானந்தம். யுரேகா யுரேகா என்று கத்திக்கொண்டு ஓடவேண்டும் போல் இருந்தது. எல்லாம் ஒரு புத்தகத்தைப் படிக்கும் வரையில் தான்.

தொடர்ச்சி... (பக்கம் -07 )

# அம்பாறை மாவட்டத் தமிழர்கள் : (ஓர் அரசியல் வெட்டு(முகம்) பகுதி 19

புதிய பிரதேச செயலகங்களை (நிர்வாக அலகுகள்) உருவாக்குவது தொடர்பாக அரசாங்கத்திற்கு விதப்புரை செய்வதற்காக ஜனாதிபதி சந்திரிக்கா தலைமையிலான அரசாங்கம் டி.எல்.வி.ஏ பனம்பாலன தலைமையில் மறுசீரமைப்புக்குழு ஒன்றை அமைத்தது. இது பனம்பாலன ஆணைக்குழு என அழைக்கப்பெற்றது. இந்த ஆணைக்குழு முன் 21.10.1999ம் திகதி அன்று அம்பாறை மாவட்டத் தமிழர் மகாசங்கத்தின் தூதுக்குழு அதன் மாவட்ட இணைப்பாளராகிய இப்பந்தி எழுத்தாளரின் தலைமையில் சென்று சாட்சியமளித்தது. இந்த ஏற்பாட்டினை அப்போது டக்ளஸ் தேவானந்தாவே செய்து உதவினார். சாட்சியமளித்த போது அம்பாறைமாவட்டத் தமிழர் மகாசங்கத்தினரால் பின்வரும் பிரேரணைகள் சமர்ப்பிக்கப்பெற்று விளக்கமளிக்கப்பெற்றன.

1. கல்முனை (கரவாகு) பிரதேச செயலகப் பிரிவானது பழைமை வாய்ந்த கல்முனைத் தரவைப்பிள்ளையார் கோயில் வீதியைப் எல்லையாகக் கொண்டு கரவாகு தெற்கு (முஸ்லிம் பெரும்பான்மை), கரவாகு வடக்கு (தமிழ்ப்பெரும்பான்மை) என இரு புதிய பிரதேச செயலகப்பிரிவுகளாகப் பிரிக்கப்பட வேண்டும். அதற்கேற்ப 1989 இலிருந்து உப அலுவலகமாக இயங்கி வருகின்ற கல்முனைத்தமிழ்ப்பிரிவு (கராவாகுவடக்கு) பிரதேச செயலமாககத் தரமுயர்த்தப்பட வேண்டும்.

குறிப்பு : இது இன்றுவரை நிறைவேற்றப்படவில்லை

2. பொத்துவில் பிரதேச செயலகப் பிரிவானது பொத்துவில் பழைய 3ஆம் குறிச்சியின் தெற்கு எல்லைக் கோட்டைப் பிரிக்கும் எல்லையாகக் கொண்டு பொத்துவில் தெற்கு (முஸ்லிம் பெரும்பான்மை), பொத்துவில் வடக்கு (தமிழ்ப்பெரும்பான்மை - கோமாரி) என இரு புதிய பிரதேச செயலகங்களாக பிரிக்கப்படவேண்டும்.

குறிப்பு : இது இன்றுவரை நிறைவேற்றப்படவில்லை

3. சம்மாந்துறை தேர்தல் தொகுதியில் முன்னைய மல்வத்தை கிராமசபை மற்றும் நாவிதன்வெளி – அன்னமலை கிராமசபைப் பரப்புகளையும் வீரமுனைக் கிராமத்தையும் உள்ளடக்கியதாகப் புதிய தமிழ்ப்பெரும்பான்மை பிரதேச செயலகப்பிரிவொன்று உருவாக்கப்பட வேண்டும்.

குறிப்பு : முன்பு முழுச்சம்மாந்துறை தேர்தல் தொகுதியும் சம்மாந்துறை (முஸ்லிம் பெரும்பான்மை) பிரதேச செயலகப் பிரவினுள்ளே அடங்கியிருந்தது. தற்போது இறக்காமம் (முஸ்லிம் பெரும்பான்மை), சம்மாந்துறை (முஸ்லிம் பெரும்பான்மை ), நாவிதன்வெளி (தமிழ்ப் பெரும்பான்மை) ஆகிய மூன்று பிரதேச செயலகப் பிரிவுகள் இயங்குகின்றன. முன்னைய மல்வத்தைக் கிராமசபைப் (தமிழ் பெரும்பான்மை) பரப்பு சம்மாந்துறை (முஸ்லிம் பெரும்பான்மை) பிரதேச செயலகப்பிரிவின் கீழேயே உள்ளடக்கப்பட்டுள்ளது. முன்னைய மல்வத்தைக் கிராமசபைப்பரப்பு ஒரு புதிய பிரதேச செயலகப்பிரிவாக உருவாக்கப்படல் வேண்டும் அல்லது முன்னைய மல்வத்தைக் கிராமசபைப்பரப்பு தற்போதுள்ள நாவிதன்வெளிப் பிரதேச செயலயகப்பிரிவின் ஆளுகையின் கீழ் கொண்டுவரப்படல் வேண்டும்.

4. 30.03.1998 இல் அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட காரைதீவு பிரதேச செயலகப்பிரிவு இதுவரை வர்த்தமானி அறிவித்தல் செய்யப்படவில்லை. 1057∴16 இலக்கமுடைய 11.12.1998 திகதியிட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் பிரகடனப்படுத்தப்பெற்ற கல்முனை நகரசபையின் தெற்கு எல்லை காரைதீவு பிரதேச செயலகப்பிரிவுக்குள் ஊடுருவுகிறது. இந்த எல்லைப்பிரச்சனை சீர்செய்யப்பெற்று 490/11 இலக்கமுடைய 28.011988



திததியிட்ட வர்த்தமானி அறிவித்தல் எல்லைகளை எந்தவிதமான மாற்றமுமின்றி உள்ளடக்கியதாகக் காரைதீவு பிரதேசசெயலகப்பிரிவு தாமதமின்றி வர்த்தமானியில் பிரகடனப்படுத்தப்படல் வேண்டும்.

குறிப்பு : காரைதீவு பிரதேச செயலகப்பிரிவு தற்போது முழு அளவிலான அதிகாரங்களுடனும் இயங்கிவருகிறது.

5. 490/11 இலக்கமுடைய 28.01.1998 திகதியிட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் உதவி அரசாங்க அதிபர் பிரிவாகப் பிரகடனப்படுத்தப்பெற்றுப் பின் பிரதேச செயலகப் பிரிவாகச் செயற்பட்டுவருகின்ற ஆலையடிவேம்புப் பிரதேச செயலகப்பிரிவின் எல்லைகளில் மாற்றம் செய்யக்கூடாது.

அதாவது எல்லைகள் பிழையாகப்

தம்பியப்பா கோபாலகிருஸ்ணண்

பிரசுரிக்கப்பெற்ற ஆலையடிவேம்பு பிரதேசசபையை உருவாக்கும் 453/19 இலக்கமுடைய 12.05.1987 திகதியிட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மீளப்பெறப்பெற்று, 1987 ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேசசபைகள் சட்டத்தின் பகுதி 1 பந்தி 2(1) இற்கிணங்க ஆலையடிவேம்பு பிரதேச செயலகப் பிரிவைப் பிரகடனப்படுத்தும் 490/11 இலக்கமுடைய 28.01.1988 திகதியிட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலிலுள்ள எல்லைகளுடன் ஒத்துப்போகும்படியாகத் திருத்தப்படவேண்டும்.

குறிப்பு : இந்த எல்லைப் பிரச்சினை இதுவரை சீர்செய்யப்படவில்லை.

அம்பாறை மாவட்டத் தமிழர் மகாசங்கத்தின் மேற்படி கோரிக்கைகளை அவற்றின் வரலாற்றுப் பின்னணியுடனான நியாயங்களுடன் முன்வைத்ததை ஏற்றுக்கொண்ட ஆணைக்குழுத்தலைவர் பனம்பாலன அவர்கள் அப்போது அங்கு பிரசன்னமாயிருந்த அப்போதைய அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபரிடம் எமது கோரிக்கைகளைச் சாதகமாகப் பரிசீலித்து ஆணைக்குழுவுக்கு அறிக்கை சமர்ப்பிக்கும்படி கேட்டுக்கொண்டார். அப்போது அம்பாறை மாவட்டத்தமிழர் மகாசங்கத்தினரிடம் தன்னை அம்பாறைக் கச்சேரியில் இது விடயமாகவந்து சந்திக்கும்படி அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் கூறினார். பின்னர் இது விடயமாக அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபரை அம்பாறைமாவட்டத் தமிழர் மகா சங்கத்தினர் அம்பாறைக் கச்சேரி சென்று சந்தித்து உரையாடியபோது எமது கோரிக்கைகள் நியாயமானதாகவும், நீண்டகாலம் நிறைவேற்றப்படாததாகவும் இருப்பதை ஒப்புக்கொண்ட அவர் “இதற்குத் தடையாக இருப்பவர்கள் அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த முஸ்லிம் அரசியல்வாதிகள்தான்“ என்று கூறி அவர்களது அரசியல் செல்வாக்கை மீறி தன்னால் தனித்து தீர்மானம் எடுக்க முடியாமல் இருப்பதற்கு வருத்தம் தெரிவித்து, இது விடயமாக முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான அஸ்ரப் அவர்களுடன் பேசி அவரது சம்மதத்தைப் பெற்றுத்தரும்படி அறிவுரை வழங்கினார்.

அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபரின் அறிவுரைக்கிணங்க அப்போது கொழும்பில் வசித்த அம்பாறை மாவட்டத் தமிழர் மகா சங்கத்தின் மாவட்ட இணைப்பாளரான இப்பந்தி எழுத்தாளர் அஸ்ரப் அவர்களைக் கொழும்பில் அவரது உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் சென்று சந்தித்தார்.

(தொடரும் ....... )

# தகவல் தொடர்புக் கோபுரங்களும் பொதுமக்களும்

## களுதாவளையில் ஒரு போராட்டம்



எம்மில் நூற்றுக்கு தொண்ணூறு சதவீதமான பொதுமக்கள் தகவல் தொடர்புக் கோபுரங்களினால் வெளிப்படும் கதிர் வீச்சின் பாதிப்புத் தொடர்பாக விழிப்புணர்வு அற்றவர்களாகவே காணப்படுகின்றனர். களுதாவளை 1ம் குறிச்சியில் அமைக்கப்பட்டுவரும் தகவல் தொடர்புக் கோபுரம் அயலில் வசிக்கும் மக்களைப் பாதிக்கும். அதனால் அக்கோபுரம் அந்த இடத்தில் வேண்டாம் என இப்பிரதேச மக்கள் குரல் கொடுத்தபோது படித்தவர்கள் தொடக்கம் சாதாரண மக்கள் வரை பின்வரும் கேள்விகளைக் கேட்டனர்.

1. இன்ன இன்ன இடங்களிலெல்லாம் கோபுரங்கள் இருக்கிறதே அந்த மக்களுக்கு ஒன்றும் ஆகவில்லை. உங்களுக்கு மட்டும் ஏதும் நடக்கப்போகிறதா?

2. எல்லோரும் போண் பாவிக்கிறீர்கள் அதிலிருந்தும் கதிர் வீச்சு வெளிப்படும் போது கோபுரத்தை மட்டும் வேண்டாம் என்பது எவ்வாறு?

3. உங்களுக்கெல்லாம் போணும் கவரேஜ்யும் வேணும் தகவல் தொடர்புக் கோபுரம் மட்டும் வேண்டாம் என்று எப்படிக் கூறுவது? தகவல் தொடர்புக் கோபுரம் இல்லையென்றால் இன்றைய உலகில் இயங்கமுடியாது என்பதை அறியாமல் அதை வேண்டாம் என்பது எவ்வாறு அறிவுக்குப் பொருத்தமாக இருக்கும்.

என்பன போன்ற கேள்விகளே பரவலாகக் கேட்கப்பட்டன. கோபுரத்தின் கதிர் வீச்சு என்பது ஹீரோ சீமா, நாகசாக்கி இல் போடப்பட்ட அணுகுண்டுகளைப் போன்று உடனடியாக உடலெல்லாம் தீப்பிடித்து எரிந்து அழிந்து போகும் விடயமல்ல. மிக மெதுவாக எமது உடல் கலங்களைத்தாக்கி நீண்டகாலத்தில் நோய் உண்டாக்கக் கூடியவைகளாகும். கோபுரம் அமைந்துள்ள பகுதி மக்கள் தொடர்பாக நுண்ணிய ஆய்வெதுவும் செய்யாமல் அந்த மக்களுக்கு எதுவும் நடக்கவில்லை என்பது தவறான ஒரு முடிவாகும். இது தொடர்பாக பல ஆய்வு முடிவுகள் வெளிவந்துள்ளன. இவற்றை naturalsociety.com எனும் இணையத்தளத்தில் வாசித்தறிய முடியும்.

போணில் இருந்து வெளிப்படும் கதிர் வீச்சின் தன்மை, அளவு என்பவற்றுக்கும் ஒரு தகவல் தொடர்புக் கோபுரத்தின் கதிர் வீச்சின் தன்மை, அளவு என்பவற்றுக்கும் இடையில் பாரிய வித்தியாசம் உண்டு என்பதை அறிந்தவர்கள் இரண்டாவது கேள்வியைக் கேட்கமாட்டார்கள்.

இன்றைய உலகு தகவல் தொடர்பு தொழில் நுட்பத்தில்த்தான் இயங்குகின்றது என்பதை அறியாதளவுக்கு இதை எதிர்ப்பவர்கள் ஒன்றும் முட்டாள்களல்ல என்பதை மூன்றாவது கேள்விகேட்போர் விளங்கிக் கொள்ள வேண்டும்.

நாம் கேட்பது இன்று அபிவிருத்தியடைந்த நாடுகளில் கையாளப்படும் சற்றலைட் தொழில்நுட்பத்தின் மூலம் இதைச் செய்யுங்கள் அல்லது குடியிருப்புப் பகுதியிலிருந்து 500 மீற்றர்களுக்கப்பால் அமையுங்கள். அதிலும் இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்கமைப்பு ஆணைக்குழுவின் சிபார்சுகள் பின்பற்றப்பட்டிருக்க வேண்டும் என்பதாகும். இவையெல்லாம் மீறப்படுகின்ற போது அது மக்களுக்கு தீங்கு விளைவிப்பதாகத்தான் அமையும் என்பதை பொதுமக்கள் கருத்தில் கொள்ளுதல் வேண்டும்.

களுதாவளையில் அமைக்கப்படும் கோபுரத்திற்கு எதிராக சுட்டிக்காட்டப்பட்ட விடயங்கள் பின்வருவனவாகும்.

1. தொலைத்தொடர்பு ஒழுங்கமைப்பு ஆணைக்குழுவின் TRCL/NW/Guidelines / 1 /2017 எனும் சுற்று நிருபத்தில் 1.3. பிரிவில் இரு கோபுரங்களுக்கான இடைவெளி 4கி.மீற்றர்கள் இருத்தல் வேண்டும் என்றிருக்கிறது. களுதாவளை 4ம் குறிச்சியில் இருக்கும் கோபுரத்திற்கும் 1ம் குறிச்சியில் அமைக்கப்படும் கோபுரத்திற்கும் 4 கி.மீ.விடக் குறைவான தூரமேயுள்ளது.

2. அதே சுற்று நிருபத்தின் 5.4 பிரிவின் கீழ் பாடசாலைகளும் ஆஸ்பத்திரிகளும் அமைந்திருக்கும் இடத்திலிருந்து 150 மீற்றர்களுக்கப்பால் கோபுரம் அமைக்கப்படுதல் வேண்டும் என்பதாகும். தற்போது அமைக்கப்படும் கோபுரம் மாணவர்கள் தங்கிக் கல்வி கற்கும் திருஞானசம்பந்தர் குருகுலத்திற்கு அண்மையிலாகும். இது 150 மீற்றர்களை விடக் குறைவானதாகும்.

3. உலக சுகாதார அமைப்பினாலும் பிற ஆய்வாளர்களினாலும் தொலைத் தொடர்பு கோபுரங்களின் பாதிப்புத் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் பிரகாரம் இருதய நோய்கள், தோல் நோய்கள், மலட்டுத்தன்மை, புற்றுநோய், சோர்வு, தலைவலி, குமட்டல், பசியின்மை, என்பன ஏற்படுவதுடன் சுற்றுச் சூழலின் பல்வகைத் தன்மை சிதைவுற்று மனித வாழ்வுக்கு அபாயகரமான ஒரு சூழலாக கோபுரம் அமைந்திருக்கும் பிரதேசம் மாற்றமுறும் எனக் கூறப்படுகின்றது. இந்த ஆய்வின் முடிவுகள் தவறு என இதுவரை எவரும் நிருபிக்காத பட்சத்தில் குடியிருப்புப் பிரதேசத்திற்குள் தகவல் தொடர்புக் கோபுரம் அமைப்பதை அனுமதிக்க முடியாது. எனக் கேட்டிருந்தனர்.

மேற்படி விடயங்களை கவனத்தில் எடுத்த மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபை களுதாவளை 1ம் குறிச்சியில் கோபுரம் அமைக்கப்படுவதற்கான அனுமதியினை வழங்கவில்லை என்பது முக்கியமான விடயமாகும். ஏனெனில் ஒவ்வொரு பிரதேசங்களிலும் அந்தந்த உள்ளூராட்சி நிறுவனங்களே அந்தப் பிரதேசத்தின் மக்கள் நலன், சுற்றுச் சூழல் இயற்கை வளங்கள், என்பவற்றில் பொறுப்புடையவர்களும் அதிகாரம் உள்ளவர்களுமாவர். பிரதேச சபைகளைப் பொறுத்தவரை 1987ம் ஆண்டின் பிரதேச சபைகள் கட்டளைச் சட்டம் இதனை அவர்களுக்கு வழங்குகின்றது. இதனை அடிப்படையாகக் கொண்டுதான் பிரதேச சபை கோபுரம் அமைப்பதற்கான அனுமதியினை மறுத்திருந்தது. இருந்தபோதும் ஒரு நிறுவனம் மேற்படி சட்டத்தை மீறி பிரதேச சபையின் அனுமதியின்றி கோபுரத்தினை அமைக்கும் பணியினை ஆரம்பித்திருந்தது. பிரதேச சபை இது தொடாபாக 13.09.2018 அன்று பொலிசில் முறைப்பாடு செய்திருந்தாலும் 17.09.2018 வரை எவரும் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கவில்லை.

**கலாநிதி.சு.சிவரெத்தினம்**



17.09.2018 அன்று மக்கள் வீதிக்கு இறங்கி பிரதேச சபையின் அதிகாரத்தினை பயன்படுத்தும்படி வலிறுத்திய பின்னரே பிரதேச சபையினர் உடன் நடவடிக்கை எடுத்து நிறுத்தியுள்ளனர்.

இதிலிருந்து பொதுமக்கள் ஒன்றை விளங்கிக் கொள்ளவேண்டும் அந்தந்தப் பிரதேச சூழலுக்கும் வளங்களுக்கும் பாதுகாலவர் அந்தந்தப் பிரதேச மக்கள்தான். பல்தேசியக் கொம்பனிகளும், வளச்சுரண்டல் காரர்களும் எமது வளத்தை, சூழலை அழிப்பதற்கும் சுரண்டுவதற்கும் நாம் இடமளிக்கக் கூடாது. குறித்த உள்ளூராட்சி நிறுவனங்கள் மூலமாகவோ அல்லது மக்கள் சக்தி மூலமாகவோ இவற்றை நாம் முறியடிக்க வேண்டும். இல்லாவிட்டால். எமது எதிர்காலச் சந்ததியே இல்லாமல் போய்விடும் என்பதை ஒவ்வொருவரும் விளங்கிக் கொள்ளல் வேண்டும்.

## குறுக்கெழுத்துப்போட்டி இல:–13

**அரங்கம் இரா. தவராஜா.**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 | ■ | 4 | 5 |
| | ■ | 6 | | | ■ | |
| 7 | | | | ■ | 8 | |
| | ■ | | ■ | 9 | | |
| ■ | 10 | ■ | 11 | | | |
| 12 | | | ■ | 13 | | ■ |
| ■ | | ■ | 14 | | | |

**இடமிருந்து வலம்:**

01 - வெண்ணிலா
04 - மட்டுநகரைச் சுற்றி வலம் வரும் நீர் நிலை
06 - பொன்
07 - புதுமை
08 - தோழி
09 - பெருமைக்குரியது (குழம்பிக்கிடக்கிறது)
11 - தலைகாக்குமாம்
12 - கிராமியநடனம்
13 - சூழல் திரும்பியிருப்பதால் ல் வை இழந்து விட்டது.
14 - அறம் குழம்பிக்கிடக்கிறது.

**மேலிருந்து கீழ்:**

01 - விஞ்ஞானம் தந்த மனிதர்களுக்கான இணைப்பு பாலம்
02 - ரதியின் மன்மதன்
03 - நாள்
05 - தீமை
08 - இணக்கம்
09 - பாண்டவர்களின் அண்ணன்
10 - சில்லியில் கிடைக்கும் விலை உயர்ந்த பொருள்

இதற்குரிய சரியான விடையை அரங்கம் செய்திக் கூப்பனில் நிரப்பி அஞ்சல் அட்டையில் ஒட்டி 12.10.2018க்கு முன்னர்

அரங்கத்துக்கு அனுப்பி வைக்கவும்.
அரங்கம் நிறுவனம்:
227 பார் வீதி, மட்டக்களப்பு.

சரியான விடையை எழுதி அனுப்புவர்களில் அதிஸ்டசாலிகள் மூவருக்கு தலா 100 ரூபாய் பரிசளிக்கப்படும்.



# மட்டக்களப்புத் தமிழ்ச் சமூகம் : அறியப்பட்டனவும் அறியப்படாதனவும் – 1

இலங்கையில் பத்தொன்பதாம் நூற்றாண்டி லிருந்து மேற்கொள்ளப்பட்டு வரும் தொல்லியலாய்வுகளும், மட்டக்களப்பில் மிக அண்மைக்காலங்களில் தொல்லியல் தலங்களில் மேற்கொள்ளப்பட்ட மேலாய்வுகளும் வரலாற்றுக்கு முற்பட்ட கற்காலத்திலிருந்து மட்டக்களப்புத் தேசத்திலே மக்கள் வாழ்ந்து வருகின்றமையை உறுதிப்படுத்தியுள்ளன.

மிக அண்மைக்காலங்களில் மட்டக்களப்பில் தொல்லியல் தலங்களில் மேற்கொள்ளப்பட்ட மேலாய்வுகளினால் பெருமளவில் வெளிவந்துள்ள தகவல்கள், மட்டக்களப்புத் தேசத்தின் வரலாற்றுக்கு முற்பட்ட கற்காலத்தைப் புரிந்து கொள்வதில் பெரும் பாய்ச்சலை ஏற்படுத்தியிருக்கிறது என்பதில் ஐயமில்லை.

இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியலாய்வுகள் மூலம் கிழக்கிலங்கையில் வரலாற்றுக்கு முற்பட்ட கற்காலத்தைச் சேர்ந்த, கல்லாயுதங்களைப் பயன்படுத்திய மக்கள் வாழ்ந்துள்ளமை அறியப்பட்டிருக்கிறது. கிழக்கு மாகாணத்தில் அம்பாறை மாவட்டத்தில் "லெனம" குகையில் கற்கருவிகளைப் பயன்படுத்திய மக்கள் வாழ்ந்து வாழ்ந்தனர் என்பதுவும் கிழக்கு மாகாணத்தில் அம்பாறை மாவட்டத்தில் "சியம்பக அண்டுவ"க்கு அண்மையிலுள்ள குகையில் இத்தகைய கற்கால மக்கள் வாழ்ந்தனர் என்பதுவும் தொல்லியலாய்வுகள் மூலம் அறியப்பட்டிருக்கிறது. இங்கு வாழ்ந்தவர்கள் வரலாற்றுக்கு முற்பட்ட கற்காலத்தைச் சேர்ந்த நாடோடி வேட்டையாடும் சமூகத்தினராவர்.

தமிழகத்திலிருந்து பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கைக்கு வந்து, இலங்கையின் பல பிரதேசங்களிலும் பரவி வாழ்ந்த நாடோடி வேட்டைச் சமூகத்தினரின் ஒரு பிரிவினரே, இலங்கையிலும் இலங்கையின் கிழக்குப் பிரதேசத்திலும் வாழ்ந்த நாடோடி வேட்டைச் சமூகத்தினராவர். இவர்களே இலங்கையின் கிழக்குப் பிரதேசத்தின் ஆதிகுடிகளாவர்.



இவர்களின் ஆதிகால வசிப்பிடங்கள் அம்பாறை மாவட்டத்திலமைந்துள்ள "லெனம" குகையும் "சியம்பக அண்டுவ"க்கு அண்மையிலுள்ள குகையுமாகும். இதனன்றி கிழக்கிலங்கையின் வனப்பிரதேசங்களில் உள்ள பல குகைளிலும் ஒதுக்கான பாறைகளிலும் இத்தகைய மக்கள் வாழ்ந்திருக்காலம் என்றே நம்பப்படுகிறது. அதனை உறுதிப்படுத்திக் கொள்ள அவ்விடங்களில் தொல்லியலாய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். கிழக்கிலங்கையின் கடற்கரையோரங்களிலும் இவர்கள் வாழ்ந்திருக்கலாம்.

வரலாற்றுக்கு முற்பட்ட கற்காலத்தையடுத்த காலத்தில், (குறுணிக்கற்காலத்தில்) மட்டக்களப்புத் தேசத்தில் மக்கள் வாழ்ந்தார்கள் என்பதனை இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகளும் இலங்கை வரலாற்று நூல்களில் உள்ள குறிப்புக்களும், மட்டக்களப்பு பூர்வீ சரித்திரத்திரத்தில் இடம் பெறும் குறிப்புகளும் அண்மைக்கால மட்டக்களப்பில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியலாய்வுகளும் அறியச் செய்திருக்கின்றன.

இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகள் மூலம் குறுணிக்கற்காலத்தைச் சேர்ந்த மக்கள் இலங்கையில் பரவலாக வாழ்ந்தமை அறியப்பட்டுள்ளது. எனினும் மட்டக்களப்புத் தேசத்தில் இத்தகைய அகழ்வாய்வுகள் இன்னமும் மேற்கொள்ளப்படவில்லை. எனினும் அண்மைக்காலத்தில் கண்டறியப்பட்ட பெருங்கற்காலப் பண்பாட்டுத் தொல்லிடங்களில் அகழ்வாய்வுகள் மேற்கொள்ளப்படும் போது இது உறுதிசெய்யப்படலாம் என்றே கருதப்படுகிறது. ஏனெனில், இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகளில் குறுணிக்கற்கால வாழிடங்களில் பெருங்கற்காலப் பண்பாட்டு சின்னங்கள் கண்டறியப்பட்டுள்ளன. சி.பத்மநாதன், இரு பண்பாடுகளுக்கும் உரிய சின்னங்கள் பலவிடங்களில் அண்மையிலோ அல்லது கலப்புற்றோ காணப்படுவது குறிப்பிடதற்குரியது எனக் குறிப்பிடுகிறார்.

இலங்கை வரலாற்று நூல்களில் வட இந்தியக் குடியேற்றங்களிற்கு முன்னர் இலங்கையில் மக்கள் வாழ்ந்தமை பற்றிக் கூறப்பட்டுள்ளது. முக்கியமாக இயக்கர், நாகர்கள் பற்றிய தகவல்களைக் குறிப்பிடலாம். மட்டக்களப்பு பூர்வ சரித்திரமும் இயக்கர், நாகர்கள் பற்றிக் குறிப்பிட்டுள்ளது. மட்டக்களப்பு பூர்வ சரித்திரம், கிறிஸ்துவுக்கு முன் 2350 ஆம் ஆண்டில் (கலி எண்ணூறில்), குருகுலத்தில் அண்டிய நாகர் கூடி அத்தி நாட்டிலிருந்து மீண்டு, இலங்கைக்கு வந்து வாழத்தொடங்கினார்கள் என்கிறது. கிறிஸ்துவுக்கு முன் 2250 ஆம் ஆண்டில் (கலி தொண்ணூறாண்டில்) நாகர்கள், இலங்கையில் வலிய இயக்கரோடு கலந்தனர் எனவும், இருவர் மரபும் ஒன்றாகியது என்றும் கூறுகிறது. இவர்கள், "நலிவில்லா நிருபஞ் செய்து, நகரலொம் இறைகளென்ன, ஒலிவளர் உகந்தம் என்னும் நகரத்திலுறைந்தார்" என்றும் குறிப்பிடுகிறது. மட்டக்களப்பு பூர்வீ சரித்திரம் இந்நிகழ்வு இடம்பெற்றதாகக் குறிப்பிடும் காலம், அதற்குப் பிந்தியது என்பது தற்போதைய தொல்லியலாய்வுகள் மூலம் அறியப்பட்டுள்ளது.

அண்மைக்கால தொல்லியலாய்வுகள், மட்டக்களப்பிலே வாழ்ந்த இயக்கர், நாகர் பற்றிய தகவல்களை வெளிக்கொணர்ந்துள்ளன. தென்னிந்தியாவில் உற்பத்தியான ஆதி இரும்புக்காலப் பண்பாடான பெருங்கற்காலப் பண்பாடு, கிறிஸ்துவுக்கு முன் 750 ஆம் ஆண்டளவில் இலங்கையிற் பரவத்தொடங்கியது, கிறிஸ்துவுக்கு முன் 500 ஆம் ஆண்டு முதலாக மட்டக்களப்பு தேசத்தில் இவ்விரு சமூகத்தினரும் கலந்து வாழத்தொடங்கினர் எனக்குறிப்பிடுகிறார் சி.பத்மநாதன் அவர்கள். அண்மைக்காலத்தில் மட்டக்களப்பில் பல இடங்களில் காணப்பட்ட பெருங்கற்காலத் தொல்லிடங்களில் மேற்கொள்ளப்பட்ட மேலாய்வுகளின் அடிப்படையிலேயே இதனைக் குறிப்பிட்டிருக்கிறார் அவர்.

இவ் இயக்க குலத்தினர் கூடுதலாக கிழக்கிலங்கையிலுள்ள மலைகளிலும் மலையடிவாரங்களிலும் வாழத்தொடங்கினர், இங்கு வாழ்ந்த இயக்கர்கள் குறுணிக்கற்கால மக்கள் எனவும் நாகர் ஆதி இரும்புக்கால மக்கள் எனவும் அடையாளங் காண்பது பொருத்தமானது எனக்குறிப்பிடும் சி.பத்மநாதன், இரு பண்பாடுகளுக்கும் உரிய சின்னங்கள் பலவிடங்களில் அண்மையிலோ அல்லது கலப்புற்றோ காணப்படுவதும் குறிப்பிடற்குரியது எனவும் குறிப்பிடுகிறார்.

**கிரான் விஜய்**

இரும்பின் பயன்பாட்டையும் பெருங்கற்காலப் பண்பாட்டையும் கொண்ட நாகர்கள் மட்டக்களப்புத் தேசத்தில் குடியேறி, இயக்கருடன் கலந்து வாழத் தொடங்கியதும், கிறிஸ்துவுக்கு முன் மூன்றாம் நூற்றாண்டிலிருந்தே மட்டக்களப்பு தேசத்தில் பெருங்கற்காலப் பண்பாடு பரவத்தொடங்கி விட்டது என்பது தற்போது உறுதியாகத் தெரிய வந்துள்ளது. (பக்:453)

இங்கு கண்டறியப்பட்டுள்ள தமிழ்ப் பிராமிக் கல்வெட்டுக்கள் கிறிஸ்துவுக்கு முன் 250 ஆம் ஆண்டளவிலிருந்து பொறிக்கப்பட்டுள்ளன என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந் நாகர்கள் தமிழ் மொழி பேசியவர்கள் என்பதுவும் தற்போது உறுதியாகத் தெரிய வந்துள்ளது. இவற்றிலிருந்து மட்டக்களப்பு தேசத்தில் இலங்கைத் தமிழர் சமுதாயம் கிறிஸ்துவுக்கு முன் முதலிரு நூற்றாண்டுகளிலும் உருவாகிவிட்டது என்பதுவும் பெருமளிவில் உறுதியாகிவிட்டது. (தொடரும்)

---

# வடபுலத்து பெண்ணின் பார்வையில் மட்டக்களப்பார்…

## மட்டுநகர் மண்ணைத்தொட்டு 30

**தமிழ்க்கவி**

*"ஆசை அறுமின் ஆசை அறுமின் ஈசனோடாயினும் ஆசை அறுமின்"*

எங்கே முயன்று பாருங்கள் முடிகிறதா என்று. ஏராளமான அழிவுகளுக்கு ஆசைதான் காரணமாக அமைந்து விடுகிறது. மண்ணாசை பெண்ணாசை பொன்னாசை என்பனவே பெரும் போர்களுக்கு காரணமாக அமைந்திருக்கின்றன. முக்கியமாக நாமறிந்த பெரும் இதிகாசங்கள் இரண்டுமே அப்படித்தான். இராமாயணத்துக்கும் மகா பாரதத்திற்கும் என்ன வித்தியாசம் என்று கேட்டால் ஒரே ஒரு எழுத்துத்தான் வித்தியாசம். ஒன்றில் பெண் மற்றதில் மண்.

எமது போராட்டம் மண்ணுக்காகத்தான் ஆரம்பித்தாலும் மனிதர்களே அதில் ஈடுபட்டதால் பெண்ணும் அதற்குள் அடக்கம். ஆரம்பத்தில் திருமணமே வேண்டாம் என்ற குறிக்கோளுடன் வாழ்ந்த போராளிகள் பருவ வயதை எட்டியபோது அவர்களுக்குள் காதல் முகிழ்த்தது. ஆரம்பத்தில் அது இயக்கவிதி மீறல் என்ற பெயரில் காதலர்களுக்கு மரணதண்டனையும் வழங்கப்பட்ட வரலாறு உண்டு. காரணம் பெண்களும் கூடவே இருந்தார்களே. காலப்போக்கில் அதே உணர்வுகளுக்கு தலைமையே உட்பட்டபோது சட்டவிதி மாற்றியமைக்கப்பட்டது. காதலுக்கு வயதெல்லை வந்தது. ஆனால் சொந்த மனைவியை போர் காரணமாக வருடக்கணக்கில் பிரிந்து இருப்பவர்களும் அந்த மனைவிகள் சிலராலும் அது முடியவில்லை.

மது குடித்தாலே போதைவரும், மாது நினைத்தாலும் போதை வரும், இப்படித்தான் பலர் தமது கொள்கைகளில் வீழ்ச்சி கண்டனர். காலாதி காலமாக எதிரி நாடுகளிடையே குழப்பம் செய்ய பெண்களே பயன்பட்டு வந்தனர். இது போன்ற இன்னோரன்ன காரணங்களுடன்




ஒரு வலுவான காரணமும் சொல்லப்பட்டது "இன்னும் எத்தனை ஆயிரம் இளைஞர்கள் கொல்லப்பட்டாலும் இந்த யுத்தம் வெல்லாது. எமது இளைஞர்களை நாம் பலியிட விரும்பவில்லை", என்றும் காரணம் வந்தது. இவற்றுக்கெல்லாம் அப்பால் இது போன்ற சிலபல புகைப்பட ஆதாரங்களும் பத்திரிகைகளில் வந்தன. எப்படியோ இரண்டாயிரத்து ஒன்பதாம் ஆண்டு வைகாசி மாதம் இவருக்கும் முன்னரே கொல்லப்பட்டுவிட்ட மாத்தையாவின் பேச்சுக்கும் ஒரு நியாயத்தை கொடுத்து விட்டது, என்பதை அறிவு பூர்வமாக சிந்திக்கும் எவரும் மறுக்க முடியாது.

வடக்கும் கிழக்கும் பிரிந்துவிட்டன. ஆயினும் பல சட்டச்சிக்கலுள் இவர் மாட்டிக் கொண்டதால் தான் நேசித்த மட்டுநகரின் ஆட்சிப் பொறுப்பைக்கூட இவரால் இன்றுவரை அடையமுடியாதுள்ளது. அதற்கு வெளியே இவர் ஆனை கட்டி மறித்தாலும் சொந்த மண்ணில் தன் பெருமையை இழந்து போனார்.


ஒரு உத்தமவில்லனாக இவர் மாறியதால்தான் எமது போராட்டம் தோற்றும் பல்லாயிரக்கணக்கான மக்களும் போராளிகளும் கொல்லப்பட்டும் கோடிக்கணக்கான சொத்துகள் அழிக்கப்பட்டும் போயிற்று. இன்றுவரை மட்டக்களப்பின் போராளிகள் ஏராளமானோர் தம் மண்ணுக்கு திரும்ப விருப்பமில்லாதவர்களாக வன்னியிலும் யாழ்ப்பாணத்திலும் வாழ்கின்றார்கள். என்னதான் இவர்

தொடர்ச்சி... (பக்கம் -15 )

# தூய்மைபோற்றுத் தமிழ் வளர்ப்போம்!




எதிர்வரும் 07.10.2018ல் மட்டக்களப்புத் தமிழ்ச்சங்க வெளியீடாக வெளிவரவுள்ள ஒரு முக்கிய ஆய்வு நூல் "கண்ணகி வழிபாடு - பார்வையும் பதிவும்". நாடறிந்த ஆய்வாளர் கவிக்கோ வெல்லவூர்க் கோபால் அவர்களது நீண்டகால தேடலின் பிரதிபலிப்பாக இதனை முக்கியப்படுத்தமுடியும். இது அவரது 21வது நூல் என்பதுவும் குறிப்பிடத்தக்கது.












**சைவப் புரவலர் விநாயகமூர்த்தி ரஞ்சிதமூர்த்தி**
**தலைவர், மட்டக்களப்புத் தமிழ்ச்சங்கம்**

கி.பி 2ஆம் நூற்றாண்டை மையப்படுத்தியதாக உருவான சிலப்பதிகார நிகழ்வுகளின் பின்னணியில் அடியொற்றிவந்த கண்ணகி வழிபாடானது காலச் சூழலில் பல்வேறு மாற்றங்களுக்கு உள்ளாக்கப்பட்ட தன்மை குறித்து பல ஆய்வாளர்கள் தங்களது ஆய்வுகளை முன்னெடுத்திருந்தாலும் அவ்வழிபாடு நிலைபெற்றிருந்த கேரளம், தமிழகம், இலங்கை என ஒரு விரிவான ஆய்வினை முன்னெடுத்தல் என்பது ஒரு பாரிய பணியாகவே அமையும். கண்ணகி வழிபாடு தொடர்பில் இதுவரை பல ஆய்வு நூல்கள் வெளிவந்தபோதும் அந்த ஆய்வுகள் குறிப்பிட்ட பிராந்தியம் மற்றும் குறிப்பிட்ட ஆலயம் அல்லது ஆலயங்கள் என்பன பற்றியதாகவே பெரும்பாலும் இருந்துள்ளன. எனின் வெல்லவூர்க் கோபால் இந்நூலில் கேரளத்தில் இருந்து தமிழகம் மற்றும் ஈழம் வரையான கண்ணகி வழிபாட்டின் நீண்ட ஒரு வரலாற்றுப் பயணத்தை துல்லியமாகப் படம்பிடித்துக் காட்டியிருப்பது இந்நூலுக் குரிய மிகச்சிறப்பான அம்சமாகும்.

தொடக்கத்திலே கண்ணகி வழிபாட்டின் தோற்றுவாய் குறித்து விரிவாகப் பதிவுசெய்துள்ள இந்நூல் ஆசிரியர், பண்டைய சேரநாடான கேரளத்தில் சேரன் செங்குட்டுவனால் முதல் வழிபாட்டுத் தலமாக உருவாக்கப்பட்ட கண்ணகி கோட்டம் முதல் தென்கன்னடம் மங்களூர் மங்கலதேவி ஆலயம் வரை சுமார் 15 வழிபாட்டுத் தலங்களை தனது ஆய்வில் முக்கியப்படுத்தியுள்ளார். அதேபோல் தமிழகத்தில் 13 வழிபாட்டிடங்களை கண்ணகியின் தொடக்ககால வழிபாட்டுடன் தக்க ஆதாரங்களுடன் இணைத்து அது தொடர்பான தகவல்களை விபரிக்கின்றார்.





இலங்கையைப் பொறுத்தவரையில் பௌத்த சிங்கள மக்களது நீண்ட கால வழிபாட்டிலுள்ள 20 வரையான பத்தினி ஆலயங்களை மிக விரிவாகவே பதிவு செய்துள்ளார். அதேபோல் வடபிரதேசத்தில் 21 கண்ணகி ஆலயங்களையும் திருகோணமலைப் பிரதேசத்தில் 14 ஆலயங்களையும் மட்டக்களப்புப் பிரதேசத்தில் 40 வரையான ஆலயங்களையும் புகைப்படங்களுடன் ஆய்வுக்குட்படுத்தியுள்ளமையும் அவைதொடர்பான பல தகவல்களைப் பதிவாக்கியுள்ளமையும் நமது எதிர்கால சந்ததிக்கு ஒரு வரப்பிரசாதமாகவே அமையும்.

மேலும் இந்நூலில், தமிழ் சிங்கள மக்களிடையே இன்றும் நிகழ்த்தப்படும் கண்ணகி வழிபாட்டோடிணைந்த கொம்புமுறி விளையாட்டு மற்றும் போர்த்தேங்காய் அடித்தல் போன்றவையும் விரிவாகப் பதிவுசெய்துள்மையைப் பார்க்கின்றோம். கூடவே மிக முக்கியப் படுத்தப்படவேண்டிய பிறிதொரு அம்சமாக அமைவது சுமார் 60 கண்ணகியின் வடிவங்களும் 124 வரையான கண்ணகி வழிபாட்டிடங்களும் அழகிய வண்ணப்படங்களாக இடம்பிடித்துள்மையாகும்.

பேராதனைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்ப் பேராசிரியர் கலாநிதி வல்லிபுரம் மகேஸ்வரன் அவர்கள் தனது அணிந்துரையில் "இந்த நூல் ஆய்வு ரீதியான பார்வையைக் கொண்டமைந்ததால் அந்தத் தலங்களின் இட அமைவு, அவற்றின் வரலாறு, அவற்றின் தற்போதய நிலை, அவற்றில் நிகழ்ந்த மாற்றங்கள் பற்றியெல்லாம் விரிவாகப் பேசுகின்றது. இந்த நூலின் மிக முக்கியமான சிறப்பு என்னவெனில் அது பக்திரசம் சொட்டச்சொட்ட எழுதப்பட்டதல்ல. மாறாக நிதானமாக வரலாறு, பண்பாடு ஆகியவற்றின் கண்ணோட்டத்தில் ஆய்வியல் முறைகளைப் பின்பற்றி எழுதப்பட்டது." எனக் குறிப்பிடுவது இங்கு உற்றுநோக்கத்தக்கதாகும்.

இந்நூலுக்கான வாழ்த்துரையினை கேரளப் பேராசிரியரும் ஆய்வாளருமான எஸ்.ஆர்.கே.பணிக்கர் அவர்களும் சிறப்புரையினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தொல்லியல்துறை இணைப்பாளர் பேராசிரியர் ப.புஷ்பரட்ணம் அவர்களும் அணிந்துரையினை பேராதனைப் பல்கலைகழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் வ.மகேஸ்வரன் அவர்களும் எழுதியுள்ளமை மேலும் ஒரு சிறப்பம்சமாகும்.

தமிழ் இலக்கிய ஆர்வலர்களுக்காக மட்டக்களப்பு தமிழ்ச் சங்கத்தின் சார்பில், அதன் தலைவர், புரவலர் விநாயகமூர்த்தி ரஞ்சிதமூர்த்தியின் சமர்ப்பணம் இந்தப் பக்கம்.

தொடர்ச்சி...

## சின்னாகலட்டி டெலே – ஓர் ஆணவம் அழிந்த கதை

"The Earliest Dutch Visits to Ceylon" என்பது, 1927-1930 காலப்பகுதியில் பிரசுரமான நூல். எழுதியவர் டொனால்ட் வில்லியம் பேர்குசன். ஸ்கொட்லாந்தைப் பூர்வீகமாகக் கொண்ட 'பேர்குசன்' வம்சாவளியில் 1853இல் பிறந்த ஆய்வாளர். தமிழ், சிங்களம் உட்பட பத்து மொழிகளில் வல்லுநராக இருந்த அவர் இலங்கை வரலாற்றில் பல ஆய்வுகள் செய்து நூல்களை வெளியிட்டார். 1910இல் அவர் இறந்தபின்னரும் அவரது சேகரங்கள் தனி நூல்களாக வெளியாகின. அப்படி அவர் மறைந்தபின்னர், அவரால் மொழிபெயர்க்கப்பட்ட இடச்சு ஆவணங்களின் தொகுப்பாக வெளியான நூல் தான் இந்த "The Earliest Dutch Visits to Ceylon." அந்த நூலில் "Chinnacalatte" என்ற சொல் இடம்பெறும் ஓரிடத்தில் அது எந்த இடமாக இருக்கும் என்று விரிவாக ஆராய்ந்தபின் அடிக்குறிப்பாக இப்படிச் சொல்கிறார் பேர்குசன்.

"வான்கூலன் என்பவரது வரைபடத்தில் Chinnacalatte எனும் சிறுதீவும் அதன் அருகே Periacalette எனும் இடமும் குறிக்கப்பட்டுள்ளன. எனவே இவை இரண்டும் சந்தேகமின்றி இன்றைய கோட்டைக்கல்லாறும் பெரியகல்லாறும் தான்."

இன்று ஹாயாக கணினி முன் அமர்ந்துகொண்டு இலவச மின்னூல்களை, இலவச வரைபடங்களைச் சாதாரணமாகத் துருவிக்கொண்டு நான் கண்டறிந்த "Chinnacalatte ஸ்ரீ கோட்டைக்கல்லாறு" என்ற வரலாற்றுச் செய்தியை, குறைந்தது நூற்றியெட்டு ஆண்டுகளுக்கு முன், எவ்வித தொழில்நுட்ப வசதிகளும் இல்லாத காலத்தில், இலங்கைக்கும் பிரித்தானியாவுக்கும் கப்பலில் நாயாய் பேயாய் அலைந்தபடி, வேற்றுமொழி ஆவணங்களை மொழிபெயர்த்து, வரைபடங்களை ஒப்பிட்டுக் கண்டுபிடித்து, எவ்வித அலட்டலும் இல்லாமல் சொல்லிச் சென்றிருக்கிறார் ஒரு மனிதர்.

இந்தத் தலைக்கனம் தான் எத்தனை பெரியது! நூறுநூறாண்டுகளுக்கு முன் வாழ்ந்தோரின் உழைப்பை உணராமல், அவர்கள் சிந்திய வியர்வையை அறியாமல், எத்தனை இலகுவாக, நான் செய்தேன் நான் செய்தேன் என்று கூவியபடி கால் மேல் கால் போட்டுக்கொண்டு அமர முடிகின்றது! காலமெனும் முடிவிலிக்கு முன், கண்முன்னே பிறந்திறந்து மடியும் எறும்பு போலத்தானே நாம் என்பதை எத்தனை எளிதாக மறந்துவிடுகிறோம்?
டொனால்ட் வில்லியம் பேர்குசன்.....
வெட்கித் தலைகுனிகிறேன் ஐயா.
நூறாண்டுகள் பிந்தி வந்தவன்,
அந்த நூறாண்டுகள் பிந்திய என் சிற்றறிவை மன்னிக்குக.
எங்கிருந்தோ வந்து, எவன் நாட்டுக்காகவோ உதிரத்தை அர்ப்பணித்த உம் உழைப்பை, உயர்வை, உன்னதத்தைப் பணிகிறேன்.

"இத்தர்மம் இரட்சித்தான் அடி என் முடி மேலினே."

# விளையாட்டு

## வாழும் போது வாழ்த்துவோம்

### மட்டுநகரின் பாரம்பரிய விளையாட்டு வீரன் இ.வயிரமுத்து (வயிரன்)



மட்டுநகரின் பல்வேறு விளையாட்டுத் துறைகளையும் உள்நின்றியக்கும் ஆளுமைகளாகப் பலர் வாழ்ந்து வருகின்றார்கள். இத்தகைய ஆளுமைகளுள் ஒருவராக வாழ்பவரே வயிரன் என சுருக்கமாக அழைக்கப்படும் திரு.இ.வயிரமுத்து அவர்களாவார்.

மட்டக்களப்பு மோர்சாப்பிட்டியில் வருடாந்தம் தவறாமல் பாரம்பரிய விளையாட்டு விழாவைச் சிறப்பாகத் தலைமைதாங்கி ஒழுங்கமைத்து நடத்தி வரும், விளையாட்டின் மீது அதிக ஆர்வமும் ஈடுபாடும் கொண்ட இவர் தனது 72 ஆவது வயதிலும் ஓர் இளைஞனைப் போல இயங்கி வருகின்றார்.

மோர்சாப்பிட்டியில் 1918 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட வாலிப உடல் நல விருத்திக் கழகத்தில் (வை.எம்.ஏ.சி) அரை நூற்றாண்டு காலமாக உறுப்பினராகவும் தலைவராகவும் அங்கத்துவம் வகித்து, சக உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் வருடாந்தம் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டிகளையும், பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகளையும் சிறப்பாக நடத்தி வருகின்றார்.

விசேடமாக 1990 ஆம் ஆண்டுகளில் மோர்சாப்பிட்டி மற்றும் கோட்டைமுனைப் பகுதிகளில் இளைஞர்களின் வாழ்வு என்பது மிகுந்த சிக்கல்கள் நிறைந்ததாக விளங்கிய வேளையில், மூத்த வீரனாக இவர் இளைஞர்களை விளையாட்டினூடாக ஒன்றிணைத்து வாழ்க்கை மீதான நம்பிக்கையினையும் ஆற்றுப்படுத்தலையும் வழங்கவல்ல சிறந்த ஆளுமையாக இயங்கினார்.

திரு வயிரமுத்து அவர்கள் பாரம்பரிய விளையாட்டாகிய தலையணைச் சமரில் தலைசிறந்த வீரனாக பல வருடங்கள் (நாற்பது வருடங்களாக) முத்திரை குத்தியவர். மட்டக்களப்பில் எங்கு தலையணைச் சமர் போட்டி நடந்தாலும் அதில் மிகப் பெரும்பாலும் வயிரன் அவர்களே முதலிடம் பெற்றுவிடுவார். வயதாகிய பின்னரும் பல இளைஞர்களைத் தோற்கடித்து, வெற்றி வாகை சூடிய வீரனாக இவர் விளங்கினார்.

அணிக்கு நான்கு பேர் பங்குபற்றும் கரப்பந்தாட்டப் போட்டிகளில் மோர்சாப்பிட்டி வை.எம்.ஏ.சி கழகம் பல தடங்களைப் பதித்து வந்துள்ளது. இதில் முக்கிய வீரனாக திரு வயிரமுத்து அவர்கள் விளங்கியுள்ளார்.

இத்துடன் பின்னோக்கி ஓடும் போட்டி, கயிறு இழுத்தல் போட்டி முதலியவற்றில் இவர் தனது திறமைகளை வெளிக்காட்டி வந்துள்ளார். இவருடைய இளமைக் காலத்தில் நீளம் பாய்தல், தடை தாண்டி ஓடல் ஆகிய போட்டிகளில் சிறந்த வீரனாகத் திகழ்ந்துள்ளார்.

இவற்றுடன் இவர் ஒரு மேடை நாடகக் கலைஞனாக மக்கள் மனங்களில் இடம் பிடித்தவர். மோர்சாப்பிட்டியில் உருவாகி இயங்கிய மதியொளி கலை மன்றத்தினூடகப் பல மேடை நாடகங்களைத் தயாரித்து அதில் நடித்துள்ளார். 500 இற்கும் மேற்பட்ட மேடையேற்றங்களை இவர்களது நாடகங்கள் கண்டுள்ளன. 1974 ஆம் ஆண்டு இவர் தயாரித்த “மகளுக்கேத்த மாப்பிள்ளை“ எனும் நாடகம் வெள்ளி விழாக் கண்டதுடன் இதில் நடித்த கலைஞர்களுக்கு பண்டிதர் வீ.சி.கந்தையாவினால் பொன்னாடை போர்த்தி தங்கப் பதக்கம் அணிவித்துக் கௌரவிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு மட்டு நகரின் மோர்சாப்பிட்டியில் தனது 72 ஆவது அகவையிலும் விளையாட்டின் மீது அதீத ஆர்வத்துடன் செயலாற்றிக் கொண்டிருக்கும் திரு.இ.வயிரமுத்து அவர்களை வாழ்த்தி மகிழுவோம். அவருடைய ஆக்கபூர்வமான விளையாட்டுப் பணிகளையும் கலைப் பணிகளையும் நமக்கான கற்றலாகவும் கருத்திற் கொள்வோம்.



## பலம் வாய்ந்த கால்பந்து கழகங்களை வென்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்ற பட்டிப்பளை விக்னேஸ்வரா

**கௌரீசன்**

மட்டு நகரின் கால்பந்தாட்டத் துறையில் படுவான்கரைப் பிரதேச வீரர்கள் திறமை காட்டி வருவது தொடர்பாக ஏற்கனவே நாம் இப்பகுதியில் சுட்டிக் காட்டியிருந்தோம். அந்த வகையில் தற்போது மட்டக்களப்பு கால்பந்தாட்டச் சங்கத்தில் அங்கத்துவம் பெற்றுள்ள முன்னணிக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையில் தனியார் தொலைக்காட்சி நிறுவனம் ஒன்றின் அனுசரணையில் மூன்றாவது முறையாக நடத்தப்பட்டு வரும் மாபெரும் கால்பந்தாட்டத் தொடரில், முதல் தடவையாகப் பங்குபற்றும் பட்டிப்பளை விக்னேஸ்வரா விளையாட்டுக் கழகம் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளது. இவ்வணி மட்டக்களப்பு மாவட்ட கால்பந்தாட்டச் சங்கத்தில் அங்கம் வகிக்கும் முன்னணிக் கால்பந்தாட்டக் கழகங்களான கூளாவடி டிஸ்கோ கழகத்தை முதல் சுற்றில் 3:0 எனும் பேறினாலும், காலிறுதியில் மாமாங்கம் ரெட்ணம் கழகத்தை 3:0 என்ற பேறினாலும், அரையிறுதியில் சீலாமுனை யங்ஸ்டார் கழகத்தை 2:0 எனும் பேறினாலும் வெற்றி கொண்டு இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளது. இக்கழகம் புனித இஞ்ஞாசியார் வெற்றிக் கிண்ணத்திற்காக நடத்தப்படும் கால்பந்தாட்டச் சுற்றுப் போட்டியிலும் அரையிறுதிக்குத் தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பாக்கிஸ்தானை வீழ்த்திய இந்தியா



ஐக்கிய அரபு அமீரகத்தில் நடைபெற்று வரும் ஆசிய கோப்பை கிரிக்கெட் தொடரில் புதன்கிழமை நடந்த லீக் போட்டியில், பாகிஸ்தான் அணியை 8 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தி இந்தியா வெற்றிபெற்றது.

நீண்ட இடைவெளிக்கு பிறகு நடந்த இந்திய பாகிஸ்தான் கிரிக்கெட் போட்டி

இது என்பதால், நேற்றைய போட்டியின் மீது அதிக எதிர்பார்ப்பு நிலவியது.

இந்தியா - பாகிஸ்தான் போட்டிகளில் முதல் நிமிடம் முதலே பரபரப்பு தொற்றிக் கொள்ளும். இந்த போட்டியிலும் அப்படித்தான்.

போட்டி தொடங்கிய முதலே சிறப்பாக ஆடத்தொடங்கிய இந்தியா, பாகிஸ்தானின் இரண்டு விக்கெட்டுகளை அந்த அணி 3 ரன்கள் சேர்ப்பதற்கு முன்பே கைப்பற்றியது. இதன் மூலம் ஆட்டத்தில் தொடக்கம் முதலே இந்தியாவின் கரம் ஓங்கியது.

புதன்கிழமை நடந்த போட்டியில் முதலில் பேட் செய்த பாகிஸ்தான் 43.1 ஓவரில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 162 ரன்களை மட்டுமே எடுத்தது.

அதிகம் எதிர்பார்க்கப்பட்ட இந்தக் கிரிக்கெட் போட்டியில் 8 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் இந்தியா அபார வெற்றி பெற்றது.

## தேசியப் போட்டியில் முன்னேறியுள்ள ஏறாவூர் கால்பந்து அணி



கால்பந்தாட்டச் சம்மேளனத்தினால் நடத்தப்படும் டிவிசன் 2 கால்பந்தாட்டத் தொடரில் முதல் தடவையாக அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது. இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனத்தில் அங்கம் வகிக்கும் முன்னணி கால்பந்தாட்ட அணியான இலங்கை சிறைச்சாலைகள் திணைக்கள அணியை வெற்றி கொண்டு ஏறாவூர் இளந்தாரகை அணி அரையிறுதிக்குத் தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த குருநகர் பாடுமீன் கழக அணியுடன் அரையிறுதிப் போட்டியில் அது மோதுகிறது.

பக்க அனுசரணை : கோட்டைமுனை விளையாட்டுக் கழகம்

Koddamunai Sports Club
Batticaloa

# மட்டு மாநகரசபை

## மின்வெட்டுக்கு யார் பொறுப்பு? தெருவிளக்கு எரியவில்லையாயின் யார் பொறுப்பு?

மாநகர எல்லைக்குள் இருக்கும் மின் சார சேவைகளுக்கு யார் பொறுப்பு? இது தொடர்பில் பலரும் பலவிதமான கருத்துக்களை வைத்திருப்பார்கள். பொதுவில் பலருக்கு இது ஒரு குழப்பமான விடயந்தான்.

இரு தரப்பினர் உண்மையில் இதற்கு பொறுப்பு. மின்சாரத்தை விநியோகிப்பது இலங்கை மின்சார சபை. ஆனால், உங்கள் தெருவிளக்குகளை பராமரிப்பது மாநகர சபை.

மின்வெட்டு ஏற்பட்டால் நீங்கள் முறைப்பாடு செய்ய வேண்டியது மின்சார சபைக்கு. ஆனால், தெருவிளக்கு எரியவில்லை அல்லது அது ஏற்றப்படவில்லை என்றால் அதற்கு நீங்கள் அழைக்க வேண்டியது மாநகர சபையை. புதிதாக உங்கள் தெருவுக்கு மின்விளக்கு தேவை, அல்லது முக்கிய வீதியில் விளக்கு இல்லை என்ற விடயம் எல்லாம் மாநகர சபையுடன் கையாளப்பட வேண்டியவைதான்.

மட்டக்களப்பு மாநகர தற்போதைய முதல்வர் தான் பதவி ஏற்றவுடன் முதன் முதலில் அளித்த வாக்குறுதிகளில் ஒன்று மாநகருக்கு ஒளியேற்றுவேன் என்பதுதான்.

அந்த வகையில், மாநகர எல்லைக்குள் தற்போது புதிதாக 700 விளக்குகளை மாநகர சபை பொருத்தியுள்ளதாக அல்லது திருத்தியுள்ளதாக மாநகர ஆணையாளர் என். மணிவண்ணன் கூறுகிறார்.

கல்லடிப் பாலத்துக்கு விளக்குகளை பராமரிப்பதற்கு போதிய நிதி இல்லை என்று வீதி அபிவிருத்தி அதிகார சபை சிரமப்பட்ட நிலையில், மாநகர சபை அதற்கான பொறுப்புக்களை ஏற்று அங்கு விளக்குகளை முழுமையாக எரியவிட்டு, அதனை பராமரிக்கத் தொடங்கியுள்ளது.

ஆனால், மாநகர சபைக்கு சவாலாக இருக்கும் ஒரு இடம் திருமலை வீதி. சத்துருக்கொண்டான் வரையிலான பகுதி இந்த பிரதான வீதியில் இருளில் இருக்கின்றது. அதற்கு ஒளியேற்றுவது தமது அடுத்த கடமை என்கிறார் மாநகர ஆணையாளர்.

காந்தி பூங்கா பகுதியிலும் கடைகள் மூடப்பட்ட பின்னர் சில இடங்கள் இருளில் இருப்பதாக புகார் இருக்கின்றது போலும். அதனையும் தாம் செய்தாக வேண்டும் என்று அவர் கூறுகிறார்.

ஆனாலும் இதுவரை மட்டக்களப்பில் இருக்கும் நிலைமைகளை வைத்துக்கொண்டு புதிய மாநகர சபை திருத்த வேலைகளையே பொதுவாக மேற்கொண்டு வந்துள்ளது. நீண்டகாலம், போரினால், பாதிக்கப்பட்ட ஒரு பகுதி, அதன்காரணமாக 3 தசாப்தங்கள் அபிவிருத்திப் பணிகள் சரியாக மேற்கொள்ளப்படாத பகுதி, மக்களால் தேர்ந்தெடுக்கப்படாத அவையாக பலகாலம் இருந்த பகுதி என்ற வகையில், இந்த மின்சார ஒளியேற்றல் விடயத்தில் கூட முற்றான புதிய ஏற்பாடுகள் செய்யப்படவேண்டிய தேவை இருக்கின்றது.

மாநகரப் பகுதிக்கு முழுமையான மின்சார மீள் வலையமைப்பு மீண்டும் ஒட்டுமொத்தமாக செய்யப்பட வேண்டிய தேவை இருக்கின்றது என்பதை மாநகர ஆணையரும் ஒப்புக்கொள்கிறார்.

அதற்காக தனியார் நிறுவனங்களுடன் ஆராயப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார். குறிப்பாக பாதுகாப்பு கமெரா, விளம்பரங்களுக்கான மின் பலகைகள் ஆகியவற்றையும் பொருத்துவதற்கான ஏற்பாடுகளையும் உள்ளடக்கியதாக அது அமையும் என்கிறார் அவர்.

வாசகர்களே, மாநகர சபை தொடர்பாகவும், மின்சார விளக்குகள் தொடர்பாகவும் உங்களுக்கு கருத்துக்கள், விமர்சனங்கள், ஆலோசனைகள் ஏதும் இருந்தால் அரங்கம் பத்திரிகைக்கு அறிவியுங்கள். அவற்றை பிரசுரிப்பதுடன், அவற்றுக்கான பதிலுரைகளையும் மாநகர சபையிடம் இருந்து பெற்றுத்தர நாம் முயலுவோம்.

### மாநகரசபை, மட்டக்களப்பு
### வருமான நிலுவைகளை சேகரிக்கும் மாதம்
(செப்டெம்பர் 2018)

**நோக்கம்:**

- சகல வட்டாரங்களிலும் நிலுவையாக உள்ள ஆதனவரி, வியாபாரவரி மற்றும் ஏனைய நிலுவைகளை அறவிடுதல்.
- இதன்மூலம் வரியிறுப்பாளர்களுக்கும் பிரஜைகளுக்கும் அபிவிருத்திகளை மேற்கொள்வதன் மூலம் சிறந்த சேவையினை வழங்குதல்

**செயற்பாடு:**



**செப்டெம்பர் 2ம், 3ம் வாரம்**

- வீடு வீடாகச் சென்று ஆதனவரி நிலுவைகளை அறவிடுதல்
- சகல வியாபார நிலையங்களிலும் வியாபாரவரி மற்றும் விளம்பரவரிகளை அறவிடுதல்

**செப்டெம்பர் 4ம் வாரம்**

- ஆதனவரி : நிலுவைகளை அதிகமாக உள்ள பிரதேசங்களில் மாநகரசபை கட்டளைச்சட்டம் 252வது பிரிவிற்கிணங்க வரி நிலுவைக்கு பெறுமதியான பொருட்கள் தங்களது வீடுகளிலிருந்து பறிமுதல் செய்யப்படும். (நடுக்கட்டு நடவடிக்கை)
- நானாவித வரி : வியாபாரவரி, விளம்பரவரி செலுத்தாதவர்களிற்கு எதிராக நீதிமன்ற நடவடிக்கை மேற்கொள்ளல்.
- சிறந்த வரியிறுப்பாளர்களுக்கு முன்னுரிமை அட்டை மற்றும் பரிசில்கள் வழங்கி கௌரவித்தல்.






**நீங்கள் செய்யவேண்டியவை**

- உங்களது வீடுகளுக்கு வரும் உத்தியோகத்தர்களுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்குதல்.
- மாநகரசபையினால் அனுப்பப்படும் ஆதனவரி அறிவித்தல் அல்லது வரி செலுத்திய பற்றுச்சீட்டை காண்பித்தல்.
- 2018 செப்டம்பர் 08 - 24 வரையான காலப்பகுதியில் தங்கள் வீடுகளுக்கு வரும் உத்தியோகத்தர்களிடம் வரி நிலுவைகள் அல்லது வரிகளைச் செலுத்துவதற்கு தயாராக இருத்தல்.
- தாங்கள் வேலைக்குச் செல்பவர்களாயின் உரிய ஆவணங்கள் மற்றும் வரி செலுத்துவதற்கான ஏற்பாடுகளை தங்கள் வீட்டில் உள்ளவர்களிடம் பொறுப்பளித்தல்.

மேலதிக விபரங்களுக்கு:
மாநகரசபை, மட்டக்களப்பு
065 - 2222275

தி.சரவணபவன்
கௌரவ மாநகர முதல்வர்

## கட்டுமானங்களை சட்டபூர்வமாக்குவதற்கான வழி

கரடியனாறு தருமரெத்தினம்,
மஞ்சந்தொடுவாய் கிழக்கு,
மட்டக்களப்பு.

கடந்த வாரம் முதல் மட்டு. மாநகர எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வீடுகளில் இரு துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டுவருகிறது. அதில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதவேண்டியது "கடந்த காலங்களில் சபையின் அனுமதியின்றி அமைக்கப்பட்ட கட்டிடங்களுக்கு எதிர்வரும் 06.10.2018ம் திகதிக்கு முன்னர் எதுவித தண்டப்பணமுமின்றி மாநகர சபையால் கோரப்படும் ஆவணங்களை ஒப்படைப்பதன் மூலம் ஆக்க பூர்வமான அனுமதியைப் பெறமுடியும்" என்ற தகவல். இது சகலருக்கும் ஒரு வரப்பிரசாதமாகும்.

இன்புதிய அவையின் பின்னர் மிக மிக பிரயோஜனமான இத்திட்டத்தின் சட்ட வரைபினைத் தேடிக்கண்டெடுத்து அதனை மக்கள் நலன்பெறும் வகையில் அமுல்படுத்த முற்பட்டமை பாராட்டுக்குரியதே.


சாதாரணமாக சுயதொழில், தினக்கூலி வேலைக்குப்போகும் ஒருவரால் மாநகர சபையின் அனுமதிபெற்றோ, படம்வரைந்து வீடு கட்டுவதோ முடியாத காரியம். இது சகலரும் அறிந்த உண்மையான உண்மை. அத்தொழிலாளியானவன் வீட்டு அன்றாட உணவுக்கும் போக மீதிப்பணத்தை சேமிப்பு, சீட்டு போன்றவை மூலம் சேமித்து சிறிது பணத்தை சேர்த்தவுடன் அதைக்கொண்டு சிறு அத்திவாரமிட்டு அதன் பின் கொஞ்சமாக பணம் வருவதைப்பொறுத்து சீமேந்து, கல், மண் போன்றவற்றை வாங்கி மேசனுக்கு உதவியாளராக தானே வேலை செய்து எப்படியோ வீட்டை அரை குறையாகவே முடித்திருப்பான். இந்த காலகட்டத்தில் மாநகர சபையின் அனுமதியைப்பற்றி தெரிந்திருக்கமாட்டான்.

30 வருடங்களுக்கு முன் ஆரம்பித்த வீடு இப்போதுதான் முடியும் தருவாயிலிருக்கும். அல்லது முடிந்திருக்கும். இந்த வேளையில் இச்சட்டமும், தண்டப்பணமில்லா திட்டமும் ஒரு வரப்பிரசாதமே.

சபையினருக்கும் முதல்வருக்கும் நன்றிகள். இருப்பினும் ஒரு குறை என்னவெனின் முடிவுத்திகதியை கொஞ்சம் நீடித்தால் சகலரும் நன்மையடைவர் என்பது என் போன்றோரின் ஆதங்கமாகும்.

ஏசியா பவுண்டேசன் நிறுவனத்தின் உபதேசிய ஆளுகை திட்டத்தின் நன்கொடையின் ஊடாக இந்தப் பக்கத்துக்கான அனுசரணை வழங்கப்படுகின்றது

## 10 வீத வரி அறவீடு



ஆசிய மன்றத்தின் ஆதரவுடன் மட்டக்களப்பு மாநகரசபை முன்னெடுத்துள்ள வரி அறவீட்டு மாத நடவடிக்கைகளில் இதுவரை 10 வீதமான அறவிடப்படாத வரிகள் அறவிடப்பட்டுள்ளதாக மாநகர ஆணையர் தெரிவித்துள்ளார்.

ஆயினும், இந்த அறவீட்டு வீதம் போதாது என்ற காரணத்தினால், தமது யுக்திகளை மாற்றி அடுத்த வாரத்தில் செயற்படவுள்ளதாகவும் அவர் கூறினார்.

இதுவரை ஒரு வட்டாரத்துக்கு 3 பேர் வீதம், வீடு வீடாகச் சென்று அறவீட்டில் ஈடுபட்டதாகக் கூறிய ஆணையர் திரு. மணிவண்ணன், அடுத்த வாரத்தில் ஒட்டுமொத்தமாக ஒரே தினத்தில் 60 பேர் வரை ஒரே வட்டாரத்தில் அறவீட்டு நடவடிக்கையில் இறங்கவுள்ளதாகத் தெரிவித்தார்.

அதேவேளை, கோயில்கள், மசூதிகள், தேவாலயங்களிலும், இந்த வரி அறவீடு தொடர்பில் அறிவிக்கப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

இந்த வரி அறவீட்டு மாத திட்டத்துக்கு ஆசிய மன்றம் ஆதரவினை வழங்கிவருகின்றது.




ஸ்ரீறிமா பண்டாரநாயக்காவின் மேலவைக்கான அறிக்கையின் நான்காம் பாகமாக அமைந்த கடந்த வாரப் பகுதி “யாருக்கும் புரியாத கணக்கு“ என்றே தலைப்பிடப்பட்டு இருந்தது. காரணம், பெரும்பாலானவர்க்கு அது புரியாத ஒன்றாகவே இருக்கும்.

ஆனாலும், புரியாவிட்டாலும் கூட இதுதான் மனிதப்பண்டங்களாக மலையகத் தமிழர்களைப் பங்கிட்டுக் கொண்ட “யாருக்கும் புரியாத கணக்கு“ என்பதை புரிந்துகொள்ளவே இந்த அறிக்கை இங்கே பதிவு செய்யப்படுகின்றது. எனினும், இந்த பாகத்தில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கத்தக்கது.

//இந்தியாவுக்கு மீண்டும் சென்று அந்நாட்டின் பிரஜாவுரிமையைப் பெறுவதற்கு விரும்பினால், அவர்களின் பிரேரணைக்கு இந்திய அரசாங்கம் மறுப்பு தெரிவிக்கலாகாது// என்ற வரிகள்

மூலம் இலங்கை எப்போதும் இவர்களை அனுப்பும் எண்ணத்தையே கொண்டிருந்தது என்பது தெளிவு.

//எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இந்தியர்களை இந்தியாவுக்கு கட்டாயமாக திருப்பி அனுப்புதலாகாது எனவும் இந்தியப் பிரதமர் விரும்பினார்.// என்ற வரிகள் மூலம் இந்தியா இவர்களை ஏற்கத் தயாராக இருக்கவில்லை என்பதும் தெளிவு.

//இந்த ஆட்களில் எவருமே நாடற்றவர்கள் எனும் நிலைப்பாட்டினை இலங்கைகைத் தூ துக்குழு ஏற்றுக்கொள்ள வில்லை//

இந்த நாடற்றவர் என்ற சொல்லை இந்தியா விரும்பியதும், இலங்கை விரும்பாததும் ஒரேகாரணத்துக்காக என்பதுவும் தெளிவு. இருவருமே எங்காவது ஒரு பக்கத்தில் இந்த மனிதப்பண்டங்களை சுமத்தி விடுவதிலேயே குறியாக இருந்துள்ளனர் என்பதுவே அது.

இருந்தபோதிலும், சிறிமாவின் அறிக்கையின் தொடர்ச்சியை வாசித்து அறிவதன் மூலம் இரண்டு அரசுகள் எவ்வாறு “குத்துமதிப்பாக“ மக்களைப் பண்டங்கள் போன்று பரிமாற்றம் செய்ய ஒப்பந்தங்களை செய்து கொண்டுள்ளார்கள் என்பது புலப்படும்.
(அறிக்கை தொடர்கிறது)

பிரஜாவுரிமைக்காக 775000 ஆட்களை உள்ளடக்கிய கிட்டத்தட்ட 237034 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றன. இவற்றில் 134188 ஆட்களை உள்ளடக்கிய 31409 விண்ணப்பங்கள் அனுமதிக்கப்பட்டதுடன், இந்த நபர்கள் இலங்கைப் பிரசைகளாகவும் பதிவு செய்யப்பட்டனர். 675000 ஆட்களை உள்ளடக்கிய 205625 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன. 1954 ஆம் ஆண்டு உடன்படிக்கையில் இருந்து இந்திய உயர்ஸ்தானிகராலயம் 53085 நபர்களை இந்திய பிரஜைகளாக பதிவு செய்துள்ளது.

1954 ஆம் ஆண்டு, உடன்படிக்கை தோல்வி அடைந்ததன் காரணம், அது தனி நபர்களின் தற்றுணிபிற்கு அதிகமான விடயங்களை விட்டுவிட்டதேயாகும். இலங்கைப் பிரசாவுரிமையை பெற்றுக் கொள்ளத் தவறிய இந்திய வம்சாவளி நபர் ஒருவர், இந்தியபிரசாவுரிமைக்கு விண்ணப்பிப்பதா இல்லையா என்பதைத் தெரிவு செய்யும் பொறுப்பை அவருக்கே விட்டுவிட்டதும் இந்திய பிரசாவுரிமை வழங்கல் தொடர்பாக அதிகாரிகளின் தற்றுணிபிற்கு அனுமதியளித்ததுமானதோர் ஒப்பந்தம் வெற்றியடைய வெகு சிறியவாய்ப்பே இருந்தது.

இந்திய பாகிஸ்தான் வதிவாளர்கள் (பிரசாவுரிமை) சட்டத்தின் கீழ் பதிவு செய்யும் நடைமுறை பூர்த்தியானதும் நான்

# நேருவின் மரணத்தினால் திசைமாறிய இந்திய வம்சாவளியினர் நிலை



பண்டித் நேருவுடன் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பித்தேன். இலங்கைப் பிரசாவுரிமையினைப் பெற்றுக் கொள்ளாத இலங்கையிலுள்ள இந்திய வம்சாவளியினர் இந்திய பிரசைகளாவர் என்பதே இலங்கையின் நிலைப்பாடு என்பதை தெளிவாக எடுத்துக் கூறினேன். இந்திய அரசாங்கம் இந்த நிலைப்பாட்டினை ஏற்றுக்கொள்ள கொள்ளவில்லை. இதனால் பேச்சுவார்த்தைகள் முடங்கின. இக்கட்டத்திலே, இந்திய பிரதமருடன் நேரடி பேச்சுவார்த்தையினை நடத்துவது உசிதமானது என நான் நினைத்தேன். அவர் அதனை ஏற்றுக்கொண்டார். பிரதமர் நேரு இந்த வருடம் மே மாதம் காலமானதை நீங்கள் அறிவீர்கள். அதனால், இந்த விடயத்தை நான் அவரை தொடர்ந்து பிரதமராகிய லால் பகதூர் சாஸ்திரியுடன் மீண்டும் பேசவேண்டிஏற்பட்டது.

இந்திய பிரதமரின் முன்னெடுப்பின் பேரில் இப்பிரச்சினை பற்றி உத்தியோகபூர்வமட்டத்தில் கலந்துரையாடல் நடத்துவதற்காக செப்டெம்பரில் உத்தியோகபூர்வதூதுக்குழு ஒன்று கொழும்புக்கு அனுப்பிவைக்கப்பட்டது. இந்த நபர்களின் பிரசாவுரிமை அந்தஸ்து தொடர்பாக இலங்கை வெளிப்படுத்திய கருத்துக்களை இந்திய தூதுக்குழு ஏற்றுக்கொள்ளாதபோதிலும் ஒரு விட்டுக்கொடுப்புமிகு தீர்வினை இந்தியா முன்வைத்தது. அதாவது, இந்திய வம்சாவளியினரில் குறிப்பிட்ட எண்ணிக்கையினர், இந்தியாவுக்கு திருப்பி அனுப்பப்படல் வேண்டும். ஏனையோருக்கு இலங்கை பிரஜாவுரிமை வழங்கப்படல்வேண்டும் என்பதே அதுவாகும்.
(அறிக்கை தொடரும் )

பின்குறிப்பு : சிறிமாவின் அறிக்கையின் ஐந்தாம் பாகத்தில் மிகமுக்கிய விடயம் ஒன்றுவெளிப்படுவது அவதானிக்கத்தக்கது. 1949 இந்திய பாகிஸ்தான் வதிவாளர் (பிரஜாவரிமை ) சட்டம் நிறைவேற்றப்பட்டதில் இருந்து இலங்கையின் நோக்கத்தைப்புரிந்து கொண்ட பண்டிற் ஜவகர்லால் நேரு, இந்திய வம்சாவளியினரை இலங்கையில் இருந்து மீளப் பெறாமல் இருப்பதற்கான எல்லா சாத்தியமான அரசியல் நகர்வுகளையும் செய்துள்ளார். அவரது இறப்புவரை அந்த நகர்வு சாத்தியமாகியுள்ளது. அவரது இறப்புநிகழ்ந்து (1964 -05-24) குறுகிய காலத்தில் இடைக்கால பிரமராகவிருந்த லால் பகதூர்சாஸ்திரியுடன் ஒப்பந்தத்தை செய்து பல லட்சம் பேரை இந்தியாவுக்கு திருப்பி அனுப்பிய சாதுரியம் சிறிமா பண்டரநாயக்கவுடையது.

மல்லியப்புசந்தி திலகர்

//இலங்கைப் பிரசாவுரிமையை பெற்றுக் கொள்ளத் தவறிய இந்திய வம்சாவளி நபர் ஒருவர், இந்திய பிரசாவுரிமைக்கு விண்ணப்பிப்பதா இல்லையா என்பதைத் தெரிவுசெய்யும் பொறுப்பை அவருக்கே விட்டுவிட்டது // இப்படி 1954 ஒப்பந்த தோல்விக்கு காரணம் என சிறிமா எண்ணியதன் காரணமாகவே 1964 ஒப்பந்தம் இன்னும் கடுமையானதாக, கட்டாயமாக நாடு கடத்துவதாக அமைந்தது.
( தொடரும் .... )

---




*(தனக்கு இலக்கியமும் தெரியும் என்று கூறி அவதானியர் இதனை எழுதத் தலைப்பட்டுள்ளார். பாராட்டு, திட்டு அனைத்தும் அவருக்கே)*

சீதையின் சீத்துவம்

---

” சீதை யாரென்று எங்களுக்கு தெரியும் அவளை நெருப்பில் இறக்கி சோதிக்க வேண்டிய அவசியமில்லை ” என இலங்கை தமிழ் அரசுக்கட்சியின் பொது செயலாளர் கிருஷ்ணப்பிள்ளை துரைராஜசிங்கம் தெரிவித்ததாக செய்திகள் தெரிவித்தன.

இச் செய்தியை பார்த்ததும் சீதையைப் பற்றி அறிய சீதையின் பக்கம் எனது தொலை நோக்கியை திருப்பினேன். அதில் கிடைத்த தரவுகளை வாசகர்களோடு பகிர்ந்து கொள்கிறேன்.

சீதை அயோத்தி ராமனின் அன்பு மனைவி; கம்பநாடனின் கற்புத்தெய்வம்; இராமகாதையின் ஜீவநாடி, மாதவி சிலப்பதிகாரத்துக்கு எவ்வளவு முக்கியமானவளோ, அவ்வளவு முக்கியமானவள் இராமாயணத்திற்கு சீதை. முதலிலே சீராக வாழ்ந்து, இடையிலே சீரழிந்து, கடைசியியிலே



கற்பிழந்தவளெனக் கணவனாலே குற்றஞ் சாட்டப்பட்டு, கானகத்திற்கு ஓட்டப்பட்டவள். அடுக்கடுக்காக அல்லல் பலவற்றை அனுபவித்த சீதை உண்மையிலேயே பாரிதாபத்துக்குரியவள்தான்.

கம்பனின் பாராட்டுதலைப் பெற்று காந்தியாரின் கருத்தை கவர்ந்த சீதை. இராம காதையில் சித்தரிக்கப்படுகின்ற முறையை ஆழ்ந்து நோக்கினால் அவளது கற்புநிலையிலே நாம் ஐயம் கொள்ள வேண்டிய நிலை ஏற்படுகின்றது. இராவணனால் மட்டுமல்லாமல் விராதன், காகாசுரன் எனப்படும் ஐயந்திரன் போன்ற பலராலும் விரும்பபட்டவளாகவும் காணப்படுகிறாள். மேலும் காவியத்தலைவியாக இருப்பதற்கு யோக்கியதையற்ற முறையிலே ஆழ்ந்த அறிவற்றவளாகவும், உறுதியான உள்ள மற்றவளாகவும் தோற்றமளிக்கிறாள். இவைகளுக்குரிய சான்றுகள் வால்மீகி இராமாயணம், சதகோடி இராமாயணம், அற்புதராமாயணம், யோகாவஸிட்ட இராமாயணம், ஆனந்த இராமாயணம் போன்ற பல இராமாயங்களில் காணப்படுகின்றன.

நிலத்திலே இருந்து தோன்றிய சீதையின் பிறப்பை பற்றி அற்புத இராமாயணத்திலே எட்டாவது சுருக்கத்திலே ஒரு வியத்தகு கதை காணப்படுகின்றது. அதன் படி சீதை, முற்பிறப்பில் மண்டோதரியின் மகளாகக் காணப்படுகிறாள். வேதவதி என்ற தேவக்கன்னியை இராவணன் முற்பிறப்பில் கற்பழித்ததால் அவள் இறந்து விடவே, இப் பிறவில், அவளிட்ட சபதப்படி சீதையையாகப் பிறந்து இராவணனின் முடிவுக்கு ஏதுவாக இருந்தாள் என்று வேறொரு இராமாயணம் கூறுகிறது. சுருக்கமாக கூறினால், சீதையொரு அநாமதேயமாகக் காட்சியளிக்கிறாள். தாய் தந்தையில்லாக் காரணத்தாலோ என்னவோ இந்த தாழ்வெல்லாம் இவளுக்கு உண்டானது போலும். கைகேயியின் கட்டளைப்படி தன் தாரத்தோடும், தம்பியோடும் கானகம் ஏகுகிறான் ராமன். தென்னாடு வந்து தண்ட காருண்யக் காட்டிலே நுழைந்து வந்து கொண்டிருந்த போது அவர்கள் முன் விராதன் என்ற அரக்கன் தோன்றி அவர்களை நோக்கி ”நில்லுங்கள் மேலே போக வேண்டாம், இத்தகைய அழகுமிக்க ரூபவதி காஷாய ஆடை தரித்திருக்கிற உங்கள்

தொடர்ச்சி... (பக்கம் -15 )

# கற்போம்


## பொது அறிவு (இலங்கை)

என்.தனஞ்சேயன்

இலங்கையின் கல்வி பற்றிய தகவல்கள்

| | | |
|---|---|---|
| 01) | இலவசக் கல்வியின் தந்தை | : ஊ.று.று. கன்னங்கரா - 1945 |
| 02) | இலவச பாடநூல் | : 1989 முதல் வழங்கப்படுகிறது. |
| 03) | இலவச மதிய உணவு | : 1989 முதல் வழங்கப்படுகிறது. |
| 04) | இலவச பாடசாலை சீருடை | : 1993 முதல் வழங்கப்படுகிறது. |
| 05) | பாடசாலை சாரணர் இயக்கம் | : 1917 இல் நிறுவப்பட்டது |
| 06) | தேசிய பாடசாலை | : 1987 இல் ஆரம்பிக்கப்பட்டது. |
| 07) | இலங்கை பல்கலைக்கழகம் | : 1942 (கொழும்பு) |
| 08) | பல்கலைக்கழகமானியங்கள் ஆணைக்குழு | : 1978 |
| 09) | மகாபொல அறிமுகப்படுத்தப்பட்டது. | : 1981 |
| 10) | தேசிய கல்வி ஆணைக்குழு | : 1990 |
| 11) | தேசிய கல்வி நிறுவகம் (NIE) | : 1985 (மகரகம) |
| 12) | இலங்கை திறந்த பல்கலைக்கழகம் | : 1980 |
| 13) | இலங்கை தொழில்நுட்பக் கல்லூரி | : 1893 (மருதானை) |
| 14) | கல்வியியல் கல்லூரிகள் | : 01.10.1985 |
| 15) | இலங்கை ஆசிரியர் சேவை | : 06.10.1994 |
| 16) | இலங்கை நிர்வாக சேவை (SLAS) | : 1963 (1948முதல் சிவில் சேவை) |
| 17) | இலங்கை கல்வி நிர்வாகசேவை (SLEAS) | : 1985(முன்னர் கல்விச் சேவை) |
| 18) | பாடசாலைகளின் எண்ணிக்கை | : 10997 |
| 19) | பல்கலைக்கழகங்களின் எண்ணிக்கை | : 15 |

## KAKURO-01




பக்க அனுசரணை

NCL
NELSON COLLEGE LONDON
IN PARTNERSHIP WITH
LONDON METROPOLITAN UNIVERSITY

## அறிவோம் – தெளிவோம் – பகிர்வோம் –3

### தரம் 11 - தமிழ்மொழியும் இலக்கியமும்

- மட்டுநகர் யுவன் -

கம்பராமாயணம் குகப்படலத்தில் உள்ள செய்யுள்களில் எட்டுச் செய்யுள்கள், குறித்த பாடப் பகுதியில் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரு செய்யுள் வருமாறு.

சுற்றத்தார் தேவரொடும் தொழ நின்ற
 கோசலையைத் தொழுது நோக்கிக்
கொற்றத்தார்க் குரிசில் இவரார் என்று
 குகன்வினவ கோக்கள் வைகும்
முற்றத்தான் முதல் தேவி மூன்று
 உலகும் ஈன்றானை முன்னீன்றானை
பெற்றத்தால் பெறும் செல்வம் யான்
 பிறத்தலால் துறந்தபெரி யாளென்றான்.

இச்செய்யுளை உள்ளபடி வாசித்த பின்னர் பின்வருமாறு வகைப்படுத்தி வாசித்துப் பாருங்கள்.

1. சுற்றத்தார் தேவரொடும் தொழ நின்ற கோசலையைத் தொழுது நோக்கி,
2. ‘கொற்றத்தார்க் குரிசில்’, ‘இவர் ஆர்?’ என்று குகன் வினவ,
3. (i) கோக்கள் வைகும் முற்றத்தான் முதல் தேவி
 (ii) மூன்று உலகும் ஈன்றானை முன்னீன்றானை பெற்றத்தால் பெறும் செல்வம் யான் பிறத்தலால் துறந்த பெரியாள்
4. என்றான்.

இச்செய்யுளில் பரதனின் சிறப்பு,

---

(i) ‘கொற்றத்தார்க் குரிசில்’ என்று குகனால் விளிக்கப்படுவதன் மூலமும்
(ii) குகனுக்குப் பரதன் விடையிறுக்கும் முறையினூடாகவும் சொல்லப்படுகின்றது.

இச்செய்யுளில் கோசலையின் சிறப்பு,

---

(i) சுற்றத்தார் தேவரொடும் தொழ நின்றவள் என்பதன் மூலமும்
(ii) கோக்கள் வைகும் முற்றத்தான் முதல் தேவி என்பதன் மூலமும்
(iii) மூன்று உலகும் ஈன்றானை முன்னீன்றானைப் பெற்றவள் என்பதன் மூலமும்
(iv) அவ்வாறு இராமனைப் பெற்றதால் பெறவேண்டிய அரசாகிய செல்வத்தைப் பரதனாகிய நான் பிறந்ததால் இழந்து நிற்பவள் என்பதன் மூலமும்
(v) பெருமைக்குரியவள் என்பதன் மூலமும் சொல்லப்படுகின்றது.

இச்செய்யுளில் தசரதனின் சிறப்பு,

---

கோக்கள் வைகும் முற்றத்தான் என்பதன் மூலம் சொல்லப்படுகின்றது.

இவ்வாறு செய்யுள்களைப் பொருத்தமான முறையில் வகுத்து நோக்கும் போது வினாக்களுக்கு விடையளிப்பது சுலபமாக இருக்கும். சில வினாக்களை உருவாக்குவோம்.

1. ‘கொற்றத்தார்க் குரிசில்’ என்று விளிப்பவன் யார்? விளிக்கப்படுபவன் யார்?
2. ‘கோக்கள் வைகும் முற்றத்தான் முதல் தேவி’ என்னும் தொடரில் சிறப்பிக்கப்படுபவர்கள் யாவர்?
3 .வினா 2இல் அவர்கள் எவ்வாறு சிறப்பிக்கப்படுகின்றார்கள்?
4. பரதனின் சிறப்பினை எடுத்துக்காட்டுக.
5. கோசலையின் சிறப்பினை எடுத்துக்காட்டுக.
6. ‘தேவரொடும் தொழ நின்ற கோசலை’ - இதில் கோசலை எவ்வாறு சிறப்பிக்கப்படுகின்றாள்?
7. ‘மூன்று உலகும் ஈன்றானை முன்னீன்றானை’ - இதன் பொருளை எழுதுக.
8. ‘பெற்றத்தால் பெறும் செல்வம்’ - இதில் செல்வம் என்பது எதைக் குறித்து நிற்கிறது?
9. சுற்றத்தார், தேவர், தொழ, கொற்றம், தார், குரிசில், வினவ, கோக்கள் - இவற்றின் பொருளைத் தருக.


இப்பகுதியில் எத்தகைய விடயங்களை எதிர்பார்க்கிறீர்கள் என்பதையும் வினாக்களையும் மாணவர்கள் அரங்கத்துக்கு அனுப்பிவைக்கலாம். எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும். தாமதிக்காதீர்கள்.

# மூதாதையரின் காலடிகள்

## திரியாய் - வான் திரிந்தாலும் தான் திரியா தமிழ் ஊர்

பாலசுகுமார் சேனையூர்
மேனாள் முதன்மையர்
கலை கலாசார பீடம்
கிழக்குப் பல்கலைக் கழகம்





வான் திரிந்தாலும் தான் திரியா தமிழ் ஊர். திருகோணமலையிலிருந்து இருபத்தொன்பது கல் தொலைவில் அமைந்த தனித் தமிழ் கிராமம். 1982 ஆம் ஆண்டு இந்த கிராமத்துக்கு நான் சென்றிருக்கிறேன். அப்போது அங்கு கிராம சேவையாளராக கடமையாற்றிய கெங்கா அண்ணன் அங்கு சிறப்பாக பணியாற்றிக் கொண்டிருந்தார். பழமையும் பண்பாடும் கொண்ட தனித்துவ ஊர் அது. ஊர் முழுவதையும் அங்கு புதைந்து கிடந்த தொல்லியல் சான்றுகளையும் அன்று சுற்றிப் பார்க்க கிடைத்த அனுபவம் இன்னமும் மாறாத நினைவுகளாய் என்னுள். 1983ல் ஏற்பட்ட இனக் கலவரம் அந்த ஊரையே புரட்டிப்போட அந்த மக்கள் திசை அறியாது, கிடைத்ததை எடுத்துக் கொண்டு முல்லைத் தீவுக்கும் திருகோணமலைக்கும் என இடம் பெயர்ந்தனர். கோயிலும் குளமும் வயலும் வாழ்வுமாய் இருந்த அந்த மக்கள் படிப்படியாக இன்று குடியேறி மீள் எழுச்சி பெற்று வருகின்றனர். சிதறிப்போன அந்த கிராமத்தின் வரலாற்றை மீட்டெடுக்க வேண்டியது தமிழ் சமூகத்தின் கடமை.

கட்டுக்குளப்பற்றின் வரலாற்றில் திரியாய் கிராமத்துக்கு தனி இடம் உண்டு. கிறிஸ்து சகாப்த காலத்திலிருந்து பல்லவ சோழ தாக்கங்களுக்கு உட்பட்ட நீண்ட தொன்மையான வரலாறு திரியாய் கிராமத்துக்கு உண்டு.

கட்டுக்குளப்பற்று வன்னிபங்களின் தலைமைத்துவங்கள் இங்கிருந்து தொடர்ந்ததாக சில வரலாற்றுக் குறிப்புகள் கூறுகின்றன. கோணேசர் கல்வெட்டின்படி இங்கிருந்து தாமரை நூலில் திரி செய்து விளக்கெரிப்பதற்கு கொண்டு போனதால் திரியாய் என பெயர் வந்ததாக சில செய்திகள் தெரிவிக்கின்றன.

இங்குள்ள நீலப் பணிக்கன் குளம் திரியாய் கிராமத்துக்கு வளம் சேர்த்து நிற்கிறது. கிட்டத்தட்ட ஐயாயிரம் ஏக்கர் வயல் நிலம் திரியாயை அண்டி இருப்பது இங்கு குறிப்பிடத்தக்க ஒன்று.

மகாயான பௌத்தம் தமிழ் மயப்பட்ட தென்னிந்திய செல்வாக்குக்கு உட்பட்ட பௌத்த வழிபாட்டு இடங்களும் அழிந்து போன சிவன் கோயில் சிதைவுகளும் அரச மாளிகைகளின் எச்ச சொச்சங்களும் என வரலாற்றின் தொன்மை நினைவுச் சின்னங்களாய் நீள கிடக்கின்றன.

இங்கு காணப்படும் அழிபாடுகள் பெரும்பாலானவை மஹாயான பௌத்தத்தை சேர்ந்தவையாகும். தென்னிந்தியாவில் இருந்து வணிகக் கணகங்களால் அவர்களால் வளர்க்கப்பட்டிருக்கலாம். பல்லவர்களின் தாக்கங்களும் பின்னர் சோழர்களின் தாக்கங்கள் சிற்பத்தில், கட்டிடக்கலையில் மற்றும் கல்வெட்டுகளில் வலுவாக காணப்படுகின்றன.

இங்குள்ள சமஸ்கிருத கல் வெட்டு சமஸ்கிருத கிரந்த எழுத்துக்களை பிரதி பலிக்கின்றது. பல்லவர்களது ஆதிக்கம் இலங்கையில் ஒரு சில இடங்களிலேயே காணப்படுகிறது. ஒரு பெரும் வளாகத்தை சூழ இருக்கும் தூண்களும் சிற்பங்களும் உடைந்த லிங்கங்களும் மற்றும் நீண்ட கல் பாலமும் பௌத்த, இந்து கலாசார பண்பாடுகள் ஒன்றாக கலக்கும் குணாம்சத்தை இங்கு காணமுடியும்.

சோழர் காலத்தை பிரதி பலிக்கும் தமிழ் கல் வெட்டுகளும் தமிழ் பிராமிக் கல் வெட்டுகளும் தமிழ் மரபின் தொடர்ச்சியை இங்கு வலியுறுத்தி நிற்கின்றன.

பாறை முகப்பொன்றில் இருக்கும் தமிழ் பிராமிக் கல் வெட்டு கிறிஸ்து சகாப்தத்துக்கு உரியதாக அடையாளப்படுகிறது.

இன்னோரு பாறையில் இருக்கும் சமஸ்கிருத கல்வெட்டு எட்டாம் நூற்றாண்டுக்குரிய செய்திகளாய் அமைய, இங்குள்ள துவார பாலகர் சிற்பங்கள் பல்லவ பாணியை ஒத்திருக்கின்றன.

கிறிஸ்து சகாப்தம் தொடக்கம் காலத்துக்கு காலம் பௌத்த, சைவ மரபுகளும் தென்னிந்திய வணிக கணங்களும் பல்லவ சோழ அரசுகளின் தாக்கமும் நிறைந்த செல்வாக்கு மிக்க ஒரு முக்கிய நகராக திரியாய் இருந்திருக்கிறது என்பதற்கு இங்கு கிடைக்கும் தொல் பொருளியல் சான்றுகளும் அதனோடு இணைந்த வரலாறும் ஈழத் தமிழர்களின் தொல் நிலங்களில் ஒன்றாய் திரியாய் கிராமத்தை நிலைநிறுத்தி நிற்கிறது.


இன்று மீண்டும் தங்களை தங்கள் தொல் பண்பாட்டை பாதுகாக்கும் முயற்சியில் அக் கிராமத்து மக்கள் ஒன்றிணைந்து பணியாற்றுகின்றனர். அண்மையில் அங்குள்ள பிள்ளையார் கோயில் புனரமைக்கப்பட்டு கும்பாபிசேகம் செய்யப்பட்டமை இங்கு கவனம் பெறுகிறது.



---


## மீன்பாடும் தேனாட்டில் பயணியின் பார்வையில்...


# உள்மனயாத்திரையில் இலக்கியம் படைக்கும் உமா வரதராஜன்



எழுத்தாளர் உமா வரதராஜன்

பெயர்களுக்கு முதல் எழுத்து அவசியப்படுகிறது. அவுஸ்திரேலியாவில் எனது மகன், தான் வளர்க்கும் செல்லப்பிராணியான நாய்க்குப்பெயர் வைத்து, அதன் முதல் பெயராக எனது பெயரைச்சூட்டி என்னை பெருமைப்படுத்தியிருக்கிறான்! யாருக்கு கிடைக்கும் இந்தப்பாக்கியம்! நாய் மனிதர்களை விட நன்றியுள்ளது என்பதனால் எனக்கும் பெருமைதான்!





ஆறறிவு படைத்த மனிதர்கள் தந்தையின் பெயரில் வரும் முதல் எழுத்தையும் பயன்படுத்துவோம். பெண்கள் திருமணமானதும் கணவரின் பெயரையும் இணைத்துக்கொள்வார்கள். எங்கள் ஈழத்து இலக்கிய உலகில் ஒருவர் தனது தாத்தாவினதும் தந்தையினதும் முதல் எழுத்துக்களை இணைத்துக்கொண்டு வலம்வருகிறார். முன்பின் தெரியாத வாசகர்கள் அந்தப்பெயருக்குரியவர் பெண் என்றுதான் நினைப்பார்கள். எழுத்தாளர் இந்திரா பார்த்தசாரதியையும் பல வாசகர்கள் முன்னர் அப்படித்தான் நினைத்தனர்!

இந்தப்பதிவில் நான் குறிப்பிடும் கிழக்கிலங்கையில் கல்முனையிலிருந்து நீண்டகாலமாக எழுதிவரும் உமா வரதராஜனின் தாத்தாவின் பெயர் உடையப்பா. தந்தையின் பெயர் மாணிக்கம். இவர்களின் முதல் எழுத்துக்களை இணைத்து தனது பெயருடன் உமா வரதராஜனாக எம்மத்தியில் அறிமுகமானவர்.

சிறுகதை, கவிதை, நாவல், விமர்சனம், பத்தி எழுத்து, ஒலிபரப்பு, ஒளிபரப்பு, இதழியல் முதலான துறைகளில் ஈடுபடுபவர். காலரதம், களம் ஆகிய இதழ்களையும் நடத்தியிருப்பவர். இவரது படைப்புகள் சிங்களம், ஆங்கிலம். ஜெர்மன் மொழிகளிலும் பெயர்க்கப்பட்டுள்ளன.

நான் எழுதத்தொடங்கிய கால கட்டத்தில் இவரும் இலக்கியப்பிரவேசம் செய்தமையாலும் அக்காலப்பகுதியில் கொழும்பில் சிங்கர் தையல் இயந்திர விற்பனை நிறுவனத்தில் இவர் பணியாற்றிக்கொண்டிருந்தமையாலும் அவ்வப்போது எங்கள் ஊருக்கும் வந்து என்னை சந்தித்திருப்பவர்.

மூத்த எழுத்தாளர் இளங்கீரன் அவர்களின் புதல்வர் மீலாத் கீரனுடன் இணைந்து இவர் நடத்திய காலரதம் வெளிவந்த காலத்தில் இவரது வயது 17 எனச்சொன்னால் எவருக்கும் வியப்பாகத்தானிருக்கும். காலரதம் சில இதழ்கள்தான் வெளிவந்தன. அதில் இலங்கையின் மூத்த எழுத்தாளர்கள் இளங்கீரன், கே. டானியல் ஆகியோருக்கும் மற்றும் பல எழுத்தாளர்களுக்கும் தமிழ்நாடு - புதுச்சேரி எழுத்தாளர்களுக்கும் களம் வழங்கியவர்.

அதன்பின்னர் வியூகம் என்ற பெயரிலும் ஒரு இதழ் வெளியிட்டதாக அறியக்கிடைக்கிறது. அவுஸ்திரேலியாவுக்கு நான் 1987 இல் புலம்பெயர்ந்த பின்னர் இவருடனான தொடர்புகள் அற்றுப்போயிருந்தாலும், அவ்வப்போது இவரது கதைகளைப்படித்து வந்திருக்கின்றேன்.

தனது வாழ்வின் தரிசனங்களையும் அனுபவங்களையும் தனது கதைகளில் பிரதிபலிக்கும் உமா வரதராஜனின் உள்மனத்தில் அவை தொடர்ந்து யாத்திரை செய்கின்றமையையும் இவரது கதைகளிலும் அவை எதிரொலிப்பதிலிருந்து அவதானிக்கமுடியும். இவர் எழுதிய உள்மனயாத்திரை என்ற கதைத்தொகுப்பிற்கு வடக்கு கிழக்கு மாகாண சபையின் விருதும் கிடைத்துள்ளது.

இலங்கை இதழ்களிலும் தமிழ்நாட்டில் கணையாழி, இந்தியா டுடே மற்றும் இணைய இதழ்களிலும் எழுதியிருப்பவர். இந்தியா டுடேயில் வெளியான இவரது சிறுகதை அரசனின் வருகை இலக்கிய உலகில் புகழ்பெற்றது.

மிகச்சிறந்த நூறு தமிழ்ச்சிறுகதைகளில் இதனையும் தெரிவுசெய்துள்ளார் தமிழகத்தின் எழுத்தாளர் எஸ். ராமகிருஷ்ணன். ஜெயமோகனும் இதே சிறுகதையை சிறப்பித்து பதிவுசெய்துள்ளார்.

முருகபூபதி – அவுஸ்திரேலியா

படிம உத்தியில் எழுதப்பட்டிருக்கும் அரசனின் வருகை, ஈழத்தின் நீடித்த இனரீதியான ஆக்கிரமிப்பு அதிகார அரசியலை சித்திரிக்கிறது. அதனை ஈழ அரசியலுடன் மாத்திரமில்லாது உலக அரசியலுடனும் ஒப்பிடலாம். அதனால் அதற்கு சர்வதேச தரமும் கிட்டியதுடன், ஆங்கிலத்திலும் மொழிபெயர்க்கப்பட்டு பிரபலமானது.

தொடர்ச்சி... (பக்கம் -15 )

# கண்ணகி கலை இலக்கியக் கூடலில்…

## பதிப்பாளரை காத்துக்கிடக்கும் மட்டக்களப்பு வசந்தன் பாடல்கள்



மட்டக்களப்பு தமிழகம் ஏனைய பிரதேசங்களிலிருந்து வித்தியாசமான பிரதேசமாகும். ஆகமம் சாராததும் வருடந்தோறும் சடங்குகள் நடப்பதுமான கண்ணகி, மாரி, காளி, திரௌபதி, பேச்சி, நாகதம்பிரான், வயிரவர், நரசிங்க வயிரவர், பெரியதம்பிரான், குமரத்தன் முதலான சடங்குக் கோயில்களும் ஆகமம் சார்ந்த சிவன் பிள்ளையார், முருகன் கோயில்களும், கிறிஸ்த்தவ தேவாலயங்களும் இஸ்லாமிய மசூதிகளும், பௌத்த விகாரைகளும் அருகருகே இருக்கின்ற பிரதேசம். இப் பிரதேசத்தில் பெரும்பான்மையினமாக தமிழர்கள் இருந்த போதும் அவர்களோடு இஸ்லாமியர், சிங்களவர், பறங்கியர். பூர்விகக் குடிகள் இணைந்து வாழும் பிரதேசமிது இவ்விணைப்பு வரலாற்றிற் போக்கிற்கூடாக உருவாகியுள்ளது. இந்த இணைப்பினை இங்குள்ள பண்பாடு காட்டி நிற்கிறது. ஒரு குழுமத்தின் பண்பாட்டை இன்னொரு குழுமம் புரிந்து கொண்டும் மதித்துக் கொண்டும், சகித்துக் கொண்டும் வாழ்கின்ற ஒரு வாழ்க்கைமுறை இங்குண்டு. அண்மைக்காலத்தில் ஏற்பட்ட சில பிரச்சினைகள் இதில் சில தளம்பல்களை ஏற்படுத்தினாலும் அடித்தளம் அசையாமல் இருப்பது நம்பிக்கை தருவதாகும்.

இப் பின்னணியிலேதான் கண்ணகி கலை இலக்கியக் கூடல் தோற்றுவிக் கப்பட்டது. மட்டக்களப்பில் பண்பாட்டுத் தனித்துவத்தைப் பேணுவதும் அதில் காணப்படும் பன்முகத் தன்மையை இனங்காண்பதும் ஒன்றிணைப்பதும் கண்ணகி கலை இலக்கியக் கூடலின் முக்கிய இலக்காயிற்று. இவ்வகையில் சென்ற ஆண்டு கண்ணகி கோயில்களில் படிக்கப்படும் கண்ணகி வழக்குரை பதிப்பிக் கப்பட்டது. பத்தினித் தெய்யோ என்ற பெயரையுடைய தெய்வம் கண்ணகி அம்மனாக மட்டக்களப்பில் அமைந்தது என்ற கருத்தும் உண்டு.

இவ்வகையில் சிங்கள மக்களையும் தமிழ் மக்களையும் இணைக்கும் படிமமாக கண்ணகி அம்மன் தெரிகின்றார். இம்முறை வசந்தன் கவித்திரட்டு பதிப்பிக்கப்படுகின்றது. இக்கவித்திரட்டை 1940ம் ஆண்டு தொகுத்துப் பதிப்பித்தவர் யாழ்ப்பாணம் சி.சதாசிவ ஐயர். இவர் கிழக்கு மாகாணத்தில் கல்வி அதிகாரியாகப் பணியாபற்றியவர். இவருக்கு உதவியாக மட்டக்களப்பு தெற்கு தமிழாசிரியர்கள் இருந்துள்ளனர். இவர்களின் கிராமங்களில் வழக்கிலிருந்த வசந்தன் கவி ஏடுகளைத் தேடி எடுத்து சதாசிவ ஐயரிடம் ஒப்படைத்தவர்கள். இவர்களின் உதவியின்றி இச்செயலை சதாசிவ ஐயர் செய்திருக்க முடியாது. இவர்களின் பெயர் எமக்குத் தெரியாது.

வரலாறு இவர்களை மறந்து விடுகிறது. எனினும் இவர்களும் இவர்களின் துணையுடன் இந்நூலைத் தொகுத்த சதாசிவ ஐயரும் நமது பெரும் மதிப்புக்குரியவர். சதாசிவ ஐயர் காரைதீவு, கல்லாறு, தேற்றாத்தீவு, வந்தாறு மூலை ஆகிய இடங்களில் இருந்து வசந்தன் கவிகளைப் பெற்றுள்ளார் என அறிகிறோம். அவருக்கு பதினொரு ஓலைகளும் இரண்டு பேப்பர்களும் கிடைத்ததாகவும் அறிகிறோம். இவ் ஏடுகள் பற்றிக் கூறுகையில் அவற்றின் எழுத்துக்கள் உருச்சிதைந்து இருந்ததாகவும் எழுத்துப் பிழைகள் காணப்பட்டதாகவும் அதிகமான சேர்க்கைகள் இருந்ததாகவும் தான் அவதானித்ததாக குறிப்பிடுகின்றார். இதனைப் பாடியோர்களும் இதனைப் படித்தோர்களும் படிப்பறிவில்லாத மக்கள் என்பது சதாசிவ ஐயரின் அவதானம்.

அக்கால கட்டத்தில் படிக்காதோரை படித்தோர் இப்படிப் பார்க்கும் பார்வையொன்றிருந்தது. ஆனால் இந்தப் படியாதோரே தம் பண்பாட்டையும் கலைகளையும் பேணியவர்கள். இன்றைய அறிஞர்கள் போல பேணவேண்டும் என்று கூவிக்கொண்டு அவர்கள் பேணவில்லை. அவர்களுக்கு அதுவோர் வாழ்க்கை முறை. 1930களில் இலக்கியங்களைப் பதிக்கும் முயற்சிகள் நடந்துகொண்டிருந்தன. பழைய நூல்களை பதிப்பதற்கு ஒரு முறையியல் உண்டு; இதனை மூலபாடத் திறனாய்வு என்பர்.

இது அன்று முறையாகக் கற்பிக்கப்படவில்லை. மூலபாடத் திறனாய்வு என்பது ஒரு விடயம் பற்றிக் கிடைக்கின்ற பலநூல்களை ஒப்பிட்டு அதன் மூலப்பிரதியை இனம் கண்டு அதனைப் பதிப்பிப்பதாகும். அதற்கு நிறைந்த உழைப்பு வேண்டும். பதினொரு ஓலைகளையும் இரண்டு பேப்பர்களையும் சேகரித்த சதாசிவ ஐயர் தனக்கென ஒரு முறையியலை வகுத்து அதனைத் தொகுத்துள்ளார். அவர் கிடைத்த வசந்தன் கவிகளை ஆறு தலைப்புகளின் கீழ் தொகுக்கிறார்.


1.கட்டியம் - இது ஒரு பாடல் கொண்டது. 2. தோத்திரம் - இது இருபத்தியொரு பாடல் கொண்டது. 3. சரித்திரம் - இது பதினொரு பாடல் கொண்டது. 4. தொழில் - இது பதினொரு பாடல் கொண்டது. 5. வேடிக்கை- இது பதினொரு பாடல் கொண்டது. 6. விளையாட்டு - இது ஏழு பாடல் கொண்டது. மொத்தமாக அறுபத்திரண்டு வசந்தன் பாடல்கள் இடம்பெறுகின்றன. தொகுத்தவர் எல்லாவற்றையும் தொகுத்தாரா அல்லது தாமே அதற்குள் ஒரு தெரிவை நடத்தினாரா என்பது தெளிவாகவில்லை. தனது இந்தத் தொகுப்பில் அவருக்கொரு தயக்கம் இருந்திருக்கிறது போல தெரிகிறது. தன்னுரையில் இது சரியானதொரு பதிப்பு அல்லவென்றும் இன்னொரு பதிப்பும் அதுவும் நம்பகரமான பதிப்பும் வரவேண்டும் எனக் கூறியுள்ளார். இதில் நாம் அவரது புலமைத்துவ பதிப்பு நேர்மையை தரிசிக்கிறோம். இவ் வசந்தன் கவிகள் பெரும்பாலும் ஒன்றோடொன்று தொடர்புடையதாகக் காணப்படவில்லை என்பதும் வேளாண்மையைப் பற்றிய வசந்தன் மாத்திரமே ஒருவாறு கோவைப்பட்டு நிற்கின்றன என்றும் கூறுகிறார்.

எனவே அவர் ஒரு தொகுப்பு முறையை கையாண்டுள்ளார் போல் தெரிகிறது. வசந்தன் பாடல்களை அவர் வசந்தன் பள்ளு என அழைக்கின்றார். பள்ளு என்பது பள்ளு எனும் நூல்வகை தமிழ் சிற்றிலக்கிய வகையைச் சார்ந்தது. இது மருதநில இலக்கியமாகும். இதற்கு ஓர் நீண்ட வரலாறுண்டு. பள்ளு இலக்கியங்கள், பழந்தமிழ் வேளாண்மைக் குடிகளான பள்ளர்களின் வாழ்க்கை பற்றியவை. தமிழில் பெருந்தொகையான பள்ளு இலக்கியங்கள் உள்ளன. தமிழ் சிற்றிலக்கிய வகைகளிலே பள்ளு இலக்கியங்களே அதிகமாக உள்ளன எனக் கூறப்படுகின்றது.

பள்ளு இலக்கியங்களிலிருந்து பள்ளர்களின் வாழ்க்கை நிலையை மட்டுமன்றி அக்காலப் பொதுவான நாட்டு நிலைமைகளையும் பண்பாட்டுத் தகவல்களையும் கூடப் பெற்றுக்கொள்ளமுடிகின்றது. பல பள்ளு நூல்கள் இலக்கியச் சுவை மிக்கவை. பள்ளு என்ற இலக்கிய வகைக்குப் பள்ளு நாடகம், பள்ளு மூவகைத்தமிழ், பள்ளேசல், பள்ளிசை என்ற பெயர்களும் காணப்படுகின்றன. இப்பெயர்களால் பள்ளு என்ற இலக்கிய வகை நடித்தற்கு உரியது; பாடுவதற்கு உரியது; இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழுக்கும் உரியது என்பன தெரிய வருகின்றன.வசந்தன் கவித்திரட்டு வசந்தராசன் வருவதாகவும் அவன் முன்னால் பல்வேறு வசந்தன் ஆடல்கள் இடம்பெறுவதாகவும் ஒரு நாடகத்தன்மையுடன் அமைக்கப்பட்டிருக்கிறது. இது இவ் வசந்தன் ஆட்டத்துக்கு ஒரு நாடகத்தன்மையைக் கொடுக்கின்றது. இவ் வசந்தன் ஆட்டம் கண்ணகையம்மன் கோயில் சடங்குகளில் கொம்புமுறி ஊர்வலத்திலும் ஆடப்பட்டமை மரபு. தனியே ஊர்களில் களரி போட்டு பொழுது போக்காக ஆடியமையும் உண்டு. இதற்கு ஒரு அண்ணாவியாரும் உண்டு, மத்தளமும் தாளமும் சவணிக்கையுமே இதற்கு இசைக்கப்படும் வாத்தியங்களாகும்

சவணிக்கை என்பது ஒரு முகப் பறை ஆனால் இது அடிக்கப்படுவதல்ல. அப் பறை ஒரு நரம்புக் கருவியால் இணைக்கப்பட்டு வாசிக்கப்படுவது. ஒருவகையில் தோல்வாத்தியமும் நரம்புவாத்தியமும் இணைந்த ஒரு இசைக்கருவி இது. இதனை கோயில் சடங்குகளிலும் பாவித்துள்ளனர். இதனைப் பாவித்த கிராமம் களுதாவளையாகும். அந்த மட்டக்களப்பு தமிழ் இசைக் கருவிபற்றி இன்றைய இளம் தலைமுறையினர் அறியார். இதனை கிழக்குப்பல்கலைக் கழகத்தில் 2000ம் ஆண்டில் நாம் அறிமுகம் செய்தோம். இதற்காக பத்துச் சவணிக்கைகள் செய்யப்பட்டன. இந்த வசந்தனை வசந்தன் கூத்து எனவும் அழைப்பர் இதனை சதாசிவ ஐயர் சிங்கள லீகெலி நடனத்தோடு ஒப்பிடுகிறார். இவ்வகை நடனம் இஸ்லாமியர் மத்தியிலும் உண்டு. அதுவே களிகம்பு நடனம் ஆகும். இவ்வகையில் இவ் வசந்தன் மூவின இன மக்களையும் இணைக்கின்ற ஒரு கலைவடிவமாகவும் இருக்கின்றது. சதாசிவ ஐயர் குறிப்பிட்ட ஊர்களை விட செட்டிபாளையத்திலும் படுவான்கரையிலும் அக்கரைப்பற்றிலும் திருக்கோயிலிலும் வசந்தன் ஆடியதாக தகவல்கள் கிடைக்கின்றன.

எனவே ஏராளமான வசந்தன் பாடல்கள் எம்மிடம் இருந்திருக்க வேண்டும்.




செட்டிபாளைய கண்ணகி அம்மன் ஆலய வரலாறு எனும் நூலில் இருபத்தியாறு வசந்தன் கவிகள் தரப்பட்டிருந்தன. இவ் மீள்பதிப்பில் அவற்றையும் நாம் இணைத்துள்ளோம். அங்கணமாயின் இப்போது எம்மிடம் எண்பத்தியெட்டு வசந்தன் கவிகள் இருக்கின்றன. தேற்றாத்தீவில் இன்றும் வசந்தன் உண்டு, அங்கு இரு சாரார் இவ்வசந்தனை ஆடுகிறார்கள். அவ்வசந்தன் கொப்பிகளில் இவற்றைவிட மேலதிகப் பாடல்களும் இருக்கக் கூடும். இத்துறையில் நாட்டமுள்ளோர் அவற்றையும் மேலும் கிடைக்கும் வசந்தன்களையும் தொகுத்து ஒரு முழுமையான வசந்தன் தொகுப்பினைக் கொணர்வார்கள் என எதிர்பார்க்கிறோம். இப்பாரிய பணியைச் செய்யப் போகும் அத்தொகுப்பாளரை – பதிப்பாளரை மட்டக்களப்பு வசந்தன் பாடல்கள் காத்துக் கிடக்கின்றன. இவ்வசந்தன் பாடல்களை பட்டப்படிப்புக்கும் மேல் பட்டப்படிப்புக்கும் ஆராச்சி செய்து ஆய்வாக மாணவர்கள் வெளிப்படுத்தியுள்ளனர். 1996ல் சதாகரன் தேற்றாத்தீவு வசந்தன் பாடல்களை தனது பட்டப்படிப்புக்குரிய ஆராச்சியாக மேற்கொண்டார். அவ்வாராச்சி தட்டச்சிவடிவில் உண்டு. 2003ம் ஆண்டில் சுவாமி விபுலாநந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்தில் செல்விகா எனும் மாணவி வசந்தன் பாடல்களுக்கு சுரங்களை அமைக்கும் முறைபற்றி ஆராய்ந்து பட்டம் பெற்றார். இதுவும் தட்டச்சி வடிவில் உண்டு. 2018இல் துசியந்தி எனும் மாணவி வசந்தன் கூத்தில் சிறுமிகளை இணைப்பது சம்மந்தமாக ஆய்வு நிகழ்த்தி அதில் முதுதத்துவமாணிப் பட்டம் பெற்றார். அதுவும் தட்டச்சிவடிவில் உண்டு. இவை அச்சு வடிவில் வருகையில் வசந்தன் பற்றிய பார்வைகள் இன்னும் அகலும். இம் மூன்று ஆய்வுகளுக்கும் நான் மேற்பார்வையாளராக இருந்தமை எனது அதிஸ்டம். இதனால் மென்மேலும் வசந்தன் பற்றி அறிய முடிந்தது. இன்று வசந்தன் கூத்து பல்கலைக்கழகத்தில் ஒரு பாட அலகாக வந்துவிட்டதற்கும் அது செயற்பாட்டுரீதியில் கற்பிக்கப்படுவதற்கும் பின்னால் ஒரு நீண்ட வரலாறு இருப்பது யாருக்கும் தெரியாது.ஒரு மக்கள் கலை ஆராச்சிக்குரியதாக மாறிய கதை அது. இப்பின்னணியில் வசந்தன் கவிகள் பற்றிய மீள்பதிப்பு வருவதும் அதனோடு இன்னும் சில வசந்தன் கவிகள் சேர்க்கப்பட்டிருப்பதும் ஒரு காலத்தின் தேவைபோல தெரிகிறது.

இதற்கு முன்னின்றுழைத்த கண்ணகி கலை இலக்கிய குழுவினருக்கும் இதற்கு பண உதவி புரிந்தவர்களுக்கும் நாம் மிகுந்த கடமைப்பட்டுள்ளோம்.



# கட்டிளமைப் பருவ உளநலம்

## உளவியல் முதலுதவி
## (Psychological First Aid)

டாக்டர். பி. யூடி ரமேஸ் ஜெயக்குமார்
உளநல மருத்துவர்
வாழைச்சேனை மருத்துவமனை

மூன்று சகாப்தகால யுத்தம், சுனாமி, இயற்கை அனர்த்தங்களுக்கு பின்னர் வடக்கு, கிழக்கு உட்பட இலங்கையின் சகல பிரதேசங்களும் மீண்டு கொண்டிருக்கும் போது வீதி விபத்துகள், தற்கொலை, கொலை, நீரில்மூழ்குதல், வீட்டு விபத்துக்கள், வெள்ளப்பெருக்கு, மண்சரிவு, உள்ளிட்ட அனர்த்தங்களும், உயிரிழப்புக்களும் அதிகரித்தே செல்கின்றன. குறிப்பாக இனப்பெருக்க வயதுடைய கட்டிளமைப் பருவ இறப்புகள் கட்டுப்பாட்டுக்குள் வருவதாகத் தெரியவில்லை.

இந்த பாரிய நெருக்கடி சம்பவங்கள் எவ்வாறு மக்களை பாதிக்கின்றன?

ஒரு சம்பவத்தில் உயிரிழப்புகள், உடற் காயங்கள், அங்கவீனம், காணாமல் போதல், கைதுசெய்தல், சிறைதண்டனை, அச்சுறுத்தல் போன்ற பல தொடர் நிகழ்வுகள் நடைபெறுகின்றன. இதனால் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள், அவர்களின் நெருங்கிய உறவுகள் பாரிய நெருக்கடிக்கு (Crisis) முகம் கொடுக்க நேரிடும். குறிப்பாக உயிரிழப்புகள் அல்லது பாரிய பொருளாதார பாதிப்புகள் உயிரோடு இருப்பவர்களுக்கு குறுகிய, நீண்டகால நெருக்கிடைகளை ஏற்படுத்தும். யுத்தம், இயற்கை அனர்த்தங்கள், வீதி விபத்துக்கள், வீட்டு விபத்துக்கள் நீரில் மூழ்குதல், தீவிபத்துக்கள், குடும்ப வன்முறைகள், பாலியல் வன்முறைகள், கொலைச் சம்பவங்கள் என்பன அடங்கலாகப் பல வகையான நெருக்கடி நிலைமைகள் உலகில் இடம்பெறுகின்றன. தனிநபர்கள், குடும்பங்கள் அல்லது முழுச் சமூகங்களும் இவற்றால் பாதிக்கப்படலாம்.

இந்நிகழ்வுகளால் குடும்ப உறுப்பினர்கள் ஏதோவொரு வகையில் பாதிக்கப்பட்டாலும், ஒவ்வொருவரும் வெவ்வேறு வகையான உணர்வுகள், உணர்ச்சி வெளிப்பாடுகளை கொண்டிருக்கலாம். பலர் நடைபெறும் நிகழ்வுகளால் குழப்பமடைந்து தம்மைச் சுற்றி என்ன நடக்கிறது என புரியாமல் தத்தளிக்கலாம். நிலைமைகளை கையாள முடியாது என உணரலாம். அவர்கள் விரக்தியை, பீதியை, பதகளிப்பை வெளிப்படுத்துவர். சிலவேளைகளில் மனதளவில் தொடர்புற்று பல்வேறு நடத்தை கோலங்களை வெளிக்காட்டலாம். சிலர் நிலைமைகளை சரிவர கையாழுவார்கள். ஆனால் பலரால் அவ்வாறு முடியாது. இந்த நேரத்தில் அவர்களிற்கு அருகிலிருந்து அவர்களை கண்காணித்து கையாளுவது மிக முக்கியமான உடனுதவியாகும். நடந்த நிகழ்வின் பாரதூரம், அவர்களிற்கு ஏற்பட்ட கடந்தகால அவலமான கசப்பான அனுபவங்களால் தற்போது ஏற்பட்ட விளைவுகள், அவர்களது நாளாந்த வாழ்வில் மற்றவர்களிடம் இருந்து கிடைக்கும் ஆதரவு, அவர்களது உடல்நலம், அவர்களது உளநலப்பிரச்சினைகள், அவர்களது சமூக, கலாச்சார, பண்பாட்டு, ஆன்மீக பின்னணிகள் என்பன நெருக்கீட்டு நிலைமைகளின் போது உயிரோடு இருப்பவர்களில் எதிரொலிக்கும். வாழ்க்கையில் ஏற்படும் சவால்களுக்கு முகம்கொடுக்க பலங்கள், இயலுமைகள் இருக்கின்றன. எனினும் சில சம்பவங்கள் அதன் எதிரொலிப்புகளை குறிப்பிட்ட காலம் வரை முகம்கொடுத்து மீள, மேலதிக குடும்ப, சமூக உதவிகள் தேவைப்படுகின்றன.

உளவியல் முதலுதவி

---

ஒரு சம்பவத்திற்கு பின் மீளமுடியாத துயர், மனவேதனை, அதிர்ச்சி நிலையில் உள்ள தனிநபர், குடும்ப உறுப்பினர்களிற்கு ஆதரவு தேவைப்படும். அவ்வேளையில் அருகிலிருந்த ஒருவருக்கு செய்கின்ற அனைத்து உதவிகளும் ஒன்றாக உளவியல் முதலுதவி எனப்படுகின்றது.

இதன்போது பாதிக்கப்பட்டவர்களிற்கு மேலும் குழப்பத்தை தோற்றுவிக்காத நடைமுறைக்கு சாத்தியமான முறையில் ஆதரவும், உதவியும் வழங்குவதோடு, அவர்களது உடனடி தேவைகள், உணவு, நீர் உட்பட அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்தல், அவர்களது மனவேதனைகளை செவிமடுத்தல், அரவணைத்தல், தனித்துவிடாது அருகிலிருத்தல், பாரதூரமான முடிவுகள் எடுப்பதை தவிர்ப்பதற்கான செயற்பாடுகளை கண்காணித்தல், தகவல்களை சரியாக சொல்லுதல், மேலதிக ஆபத்துக்களில் இருந்து காப்பாற்றுதல், உரிய நிவாரணங்களை பெற்றுக்கொடுக்க ஆவன செய்தல், பொய் வாக்குறுதிகளை தவிர்த்தல், அவர்கள் அங்கலாய்த்து திரிவதை தவிர்த்தல் போன்ற பல நற்செயல்களுடன் நேரிடையாகவும், மறைமுகமாகவும் தொடர்பற்றது.

உளவியல் முதலுதவி யாருக்கு எப்போது தேவைப்படும்?

அண்மையில் அனர்த்த நிலைமையை முகம்கொடுத்து உளநெருக்கீட்டிற்கு ஆளான வயதானவர்கள், பெண்கள், சிறுவர்கள், மாற்றுத் திறனாளிகள் போன்றவர்களுக்கு இதன்மூலம் உதவ முடியும். எனினும் நெருக்கடி நிலைமைகளிற்கு முகம்கொடுக்கும் அனைவருக்கும் உளவியல் முதலுதவியினை வழங்க வேண்டிய தேவை இருக்காது.

உயிராபத்தை கொடுக்கக்கூடிய காயங்கள் இருப்பதால் மருத்துவ உதவி தேவைப்படுவோர், தம்மை, தமது பிள்ளைகளை சரிவர கவனிக்க முடியாத கடும் குழப்பத்தில் இருப்போர், தமக்கு தாமே தீங்கிழைக்க கூடியோர், மற்றவர்களை காயப்படுத்தக்கூடியோர் என அறியக்கூடியவர்களிற்கு உடனடி, விசேட உடனுதவிகள் தேவைப்படும். சிலவேளைகளில் இவர்களை வைத்தியசாலைகளில் அனுமதித்து கண்காணிக்க வேண்டியும் ஏற்படலாம் பாதிப்புக்குள்ளான பெரும்பாலான நபர்கள் குறுகிய காலத்திலேயே அப்பாதிப்புகளில் இருந்து மீண்டு தமது குடும்ப, நாளாந்த செயற்பாடுகளில் ஈடுபடுவார்கள். சிலர் மீண்டெழ நீண்டகாலம் தேவைப்படும். அத்துடன் தமக்கு தாமே தீங்கிழைக்கும் மனநிலையில் இருந்து விடுபடவும், அவர்களிற்கு நீண்டகாலம் தேவைப்படும். உளவியல் முதலுதவியானது குறுகியகால, நீண்டகால இலக்குகளை அடைவதாக இருக்க வேண்டும்.

பொறுப்புணர்வுடன் உதவுவது

---

மனநெருக்கீட்டை கொடுக்கும் சந்தர்ப்பங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உளவியல் முதலுதவி அளிக்க விசேட பயிற்சியும், பயிற்றுவிக்கப்பட்டவர்களும், தொழில்சார் உளவள ஆலோசகரும்



தேவை என்றில்லை. இங்கு யாரும் இவ்வுதவியை செய்யலாம். இதன்போது சிலவற்றில் அவதானமாக இருப்பதுவும் செய்யக்கூடியவை, செய்யக்கூடாதவை தொடர்பில் தெரிந்து வைத்திருப்பதுவும் மிக முக்கியமானது.

செய்யக்கூடியவை

---

பாதிக்கப்பட்ட மக்களை மேலும், பாதிப்புகளிற்கு உள்ளாகாமல் பார்த்துக் கொள்ளுதல், சிறுவர்களையும் பெண்களையும் இயன்றவரை துஸ்பிரயோகங்கள், உடலியல், உயிரியல் மற்றும் உளவியல் பாதிப்புகளில் இருந்து பாதுகாத்தல். அவர்களின் பண்பாடு, கலாச்சாரம், சமூக வழங்கங்களிற்கு ஏற்ப நடாத்துதல், பாதிக்கப்பட்டவர்கள் நியாயமான முறையில், பாரபட்சமின்றி நிவாரணங்களை பெற உதவுதல். நிவாரணங்களை பெற மனமில்லாமல் இருப்பவர்களை இனங்கண்டு அவர்களிற்கும் அவை கிடைப்பதை உறுதிப்படுத்துதல். நேர்மையாகவும், நம்பத்தகுந்தவராகவும் நடந்துகொள்ளுதல். சொந்த முடிவுகளை எடுப்பதற்கு அவருக்கு இருக்கும் சுயாதீனத்திற்கு மதிப்பு கொடுத்தல் இப்போது உதவி தேவையில்லை என மறுத்தாலும், உதவி தேவைப்படும் போது அதனை பெற்றுக்கொள்ள முடியும் என்பதை தெளிவுபடுத்துதல். அவர்களின் இரகசியங்களை மதித்து, அவற்றை உங்களுள் வைத்திருங்கள்.

செய்யக்கூடாதவை

---

உதவி செய்வதற்கு கைமாறாக எதையும் பெற்றுக்கொள்ள வேண்டாம். (பணம், பொருள், பாலியல் லஞ்சம் உட்பட) உங்களிற்கும் உதவி பெறும் நபருக்கும் இடையில் தவறான உறவை ஏற்படுத்துதல். உங்களிடம் இருக்கும் திறமைகளை அதிகப்படுத்தி காட்டுவதோ, தெரியாத விடயங்களை தெரிந்தவர்போல் பொய்யுரைப்பதுவோ தவிர்க்கப்பட வேண்டியவை. வற்புறுத்தி உதவி வழங்குதல், பாதிக்கப்பட்டவர், பகிர்ந்து கொள்ள விரும்பாத விடயங்களை துருவி ஆராய்தல், அதனை அப்படியே காற்றில் பரப்பி விடுதல் என்பன தவிர்க்கப்பட வேண்டியவை.

பாதிக்கப்பட்டவர்களின் செயற்பாடுகள் அல்லது உணர்ச்சி வெளிப்பாடுகளை கொண்டு அவர்களை நியாய தீர்ப்பளிக்க வேண்டாம். பாதிக்கப்பட்டவர்கள், தமது துயரில் இருந்து மீளும் போது மீண்டும், மீண்டும் அவர்களது விருப்பிற்கு மாறாக கதைகளை கேட்க முனைவதையும் தவிர்த்துக் கொள்ளலாம்.

ஆர்வமுடன் செவிமடுத்தல் (Active Listening)

பிரச்சனைகளுடன் இருப்பவர்கள் தங்கள் பிரச்சினைகளை பற்றி கதைப்பதற்கு பயப்படுவார்கள் அல்லது வெட்கப்படுவார்கள். நம்பிக்கையானவர்கள் கிடைக்கும் வரை அவர்கள் அதை திறந்து விடாமல் பூட்டி வைத்திருப்பார்கள். மழைக்காலங்களில் “உன்னிச்சை நீர் தேக்கத்திற்கு நீர் நிரம்பும் போது, குறிப்பிட்ட கனவளவிற்கு மேல், நீர் திறந்துவிடப்படும் அல்லாது போனால் அணைக்கட்டு உடைந்து பயங்கர அழிவையும், வெள்ளப் பெருக்கையும் பின் வரட்சியையும் ஏற்படுத்தலாம். இதுபோலவே மனிதனிற்கு பிரச்சினைகள் வருவது பொதுவானது. பிரச்சினைகளை உடனுக்குடன் கதைத்து தீர்த்துக் கொள்வதே பயனுடையது. நிரம்பும் வரை இருந்தால் அது தற்கொலை, குடும்ப வன்முறை, மகிழ்வுடன் வாழ்வது போன்றவற்றை பாதிக்கலாம். பிரச்சினைக்குரிய ஒருவரிற்கு யாரும் உதவலாம். இங்கு பயிற்றுவிக்கப்பட்ட உளவள ஆலோசகர், உளநல மருத்துவ நிபுணர்கள், மருத்துவர்கள் எல்லாம் இரண்டாவது இடையீடுகளிற்காகவே தேவைப்படுவார்கள். உதவி அளிப்பவர்கள் எப்போதும், எவ்வேளையிலும் யாருக்கும் உதவக்கூடிய மனநிலையில் இருத்தல் வேண்டும். உதவி பெறுபவர்கள் பெரும்பாலும் தாங்கள் சொல்லும் கதைகளை நீங்கள் ஆர்வமுடன் செவிமடுக்கிறீர்கள் என்ற காரணத்தினால்தான் அவற்றை உங்களிடம் சொல்கிறார்கள். இங்கு இரகசியம் காக்க இயலாமை தனிப்பட்ட வாழ்க்கையில் குறுக்கீடு செய்தல். கைமாறு வாங்குதல், பாலியல் இலஞ்சம் கேட்டல் போன்றன உதவியளிப்பதை விட மேலும் உபத்திரவம் கொடுப்பதாக அமையும். ஆண் பயனாளிக்கு ஆண்களும் பெண்களிற்கு பெண்களுமாக உதவுவது எமது பண்பாடு, கலாச்சார விழுமியங்களிற்கு மிகப்பயனுடையமை அத்துடன் விபரீதங்களை தவிர்க்கவும் உதவும்.

தொடர்ச்சி...

### கோரளைப்பற்று தெற்கு வாகனேரி, புணானை, தரவை, வடமுனை சிறிய நீர்ப்பாசனத்திட்டத்தில் 41217 ஏக்கரில் விவசாயச் செய்கை

தீர்மானங்களுக்கமைய வயற்காணி உழுதல், விதைப்பு தொடங்குதல், வேலி அடைத்தல், கால்நடைகள் அகற்றல், நீர் முகாமைத்துவம் உள்ளிட்ட அனைத்து விடயங்களுக்கான தீரமானங்களும் இக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டன. இதன் போது, விதைப்பு ஆரம்பம், அறுவடைத் திகதிகளும் தீர்மானிக்கப்பட்டன.

கிரான் பிரதேச செயலாளர் பிரிவில் விவசாய நடவடிக்கைகளின் போது கால்நடைகள் மயிலத்தமடு, பெரியமாதவணை பிரதேசங்களுக்கு அகற்றுதல் வேண்டும். இக் கூட்டத்தில் வங்கிகளின் கடன்கள், விவசாயம், மீன்பிடி, கால்நடைப்பிரச்சினை, யானைப்பிரச்சினைகள் தொடர்பான விடயங்களுடன், தேசிய உரச் செயலகம், விவசாய கமநல காப்புறுதி, வன ஜீவராசி கள் திணைக்களம், வன வளத் திணைக்களம், புவிச்சரிதவியல் திணைக்களம் சார் விடயங்களும் ஆராயப்பட்டன.

இந்தக் கூட்டத்தில் விவசாய, கமநல சேவைகள் மற்றும் நீர்ப்பாசனத் திணைக்கள அதிகாரிகள், கால்நடை வைத்திய அதிகாரி, பிரதேச செயலக அதிகாரிகள், மற்றும் விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

தொடர்ச்சி...

## பாதாளப் பார்வை

போன்றவர்களிடம் இருக்ககூடாதவள். இவள் எம்போன்றவர்க்கே உரியவளாவாள். " என்று கூறி சீதையை எடுத்துத் தன் இருப்பின் மீது வைத்துக் கொண்டான். இதைக் கண்ட இராமன் இதயம் நொந்தவனாய் தன் தம்பியை நோக்கி " தம்பி என் மனைவிக்கு நேர்ந்திருக்கின்ற கதியைப் பார்த்தயா? " இதைக்கண்டபின்னும் வாளா இருக்கின்றனையே " என்கிறான். விராதனை வீழ்த்தி சீதையை மீட்டு மேலே சென்றனர். உண்மையிலே இச் செயல் இராமன் மனதிலே ஓர் குழப்பத்தை உண்டுபண்ணி இருக்க வேண்டும். இல்லையேல் தம்பியிடம் இது பற்றி ஏன் அலறித் துடித்துப் பேசி இருக்கவேண்டும்.?

ஆரியர்கள், திராவிடர்களை வெறுப்பின் காரணமாக அரக்கர், அசுரர், ராட்சதர் என்று கூறினார்களே தவிர, உண்மையிலே இப்பெயர் தாங்கிய மக்களினம் தமிழகத்தில் தென்னாட்டில் எந்த காலத்திலும் இருந்ததில்லை என்பது ஆராய்ச்சியாளர்கள் முடிவு.

அசோக வனத்திலே சீதையை கண்டு அனுமான் அவனுடன் பேசி சூளாமணியை பெற்றதாக வால்மீகி இராமாயணத்திலே சுந்தரகாண்டத்திலே ஒரு பகுதி வருகிறது. தன்னுடைய கடந்த கால நிகழ்ச்சிகளுள் ஒன்றாக சீதை அனுமானிடம் ஒரு நிகழ்ச்சியை கூறுகிறாள். " சித்ரகூட மலைச்சாரலில் நாங்கள் மிகுதியாக விளையாடிய காரணத்தால் களைப்புற்ற என் கணவர் என் மடி மீது தலை வைத்து படுத்தவராய் உறங்கி விட்டார் " இதுவே தக்க சமயமென்று கருதிய ஒரு காகம் என் கொங்கை , மர்ம ஸ்தானம் ஆகிய இவ்வுறுப்புகள் மேல் விருப்பங்கொண்டு இவைகளை கொத்தியது. நான் துரத்தியும், பயமில்லாமல் மீண்டும் என்னிடமே வந்து இவ்வுறுப்புகளை அடிக்கடி கொத்தியது. எனவே, காகத்தை உற்று நோக்கிய அவர் இந்திரன் மகனாகிய ஜயந்திரனே இக்காகம் எனக்கண்டு அங்கு கிடந்த ஒரு புல்லைக் கிள்ளி அம்பாக அதன் மேல் செலுத்தவே, எங்கும் அபயம் கிடைக்காமல் இராமனையே அடைந்து உய்ந்து சென்றது என்றாள்.

கடந்த கால நிகழ்ச்சிகள் எத்தனையோ இருக்க, இந்த மிக உன்னதமான நிகழ்ச்சிதான் சீதையின் சிந்தனையில் இடம் பெற்றிருந்தது போலும்! பெண்மை, நாணம், மானமுடைய எந்தப் பெண்ணும் வெளிடக்கூடாத, வெளியிட முடியாத இந்த வெட்கங் கெட்ட செய்தியை மாற்றானாகிய அனுமன் முன் கூசாது கூற சீதையின் உள்ளம் எவ்வாறுதான் இடந்தந்ததோ அறியோம் ! கற்பிலும், மானத்திலும் உறுதியான நம்பிக்கையுடைய எந்தப்பெண்ணும் இது போல் தீண்டத் தகாத தன் உறுப்புகள் மாற்றானால் வேண்டுமென்றே தீண்டப்படுமானால் அவள் உயிர் வாழ்வதென்பது இயலாத காரியம். ஆனால் சீதை இதற்கு விதி விலக்காகவும் இருக்கலாம். இராமாவதார மகிமையை கூறி உலக மக்களுக்கு நீதியை புகட்டும் உன்னத காவியத்தில் இடம் பெற்றுள்ள உயரிய செய்தியிது.

இச் செய்தியை அனுமன் சீதையிடமிடமிருந்து கேட்டதானாலோ என்னமோ அவன் சீதையை நோக்கி " நீ என் தோள் மீது அமர்ந்து கொள்வாயாக ; நான் உன்னை இலங்கையினின்றும் வெளியெடுத்துச் சென்று காப்பாற்றுகிறேன்." என்றான். மாற்றான் மனைவியிடம் இவ்வாறாகவா பேசுவது என்று வெகுண்ட சீதை இதற்கு மறுத்து விடுகிறாள். மேலும் சீதையை பல திசைகளிலும் தேடி காண முடியாத போது" இராவணன் சீதையை எடுத்து வந்த போது தன் மார்போடு இறுக அணைத்ததால், அவள் எலும்பொடியப் பட்டவளாய் ஒரு வேளை கடலிலே வீழ்ந்து இறந்திருப்பாளோ ! அல்லது சீதை காமபரவசத்தால் இராவணனிடம் சரியென சேர்ந்திருப்பாளோ ? " என்று அனுமன் தனக்குள் எண்ணுகிறான். (வால்மீகி இராமாயணம் சுந்தர காண்டம் அனுமன் காட்சிப் படலம்)




இராமனுக்கு ஊழியனான அனுமனே இராமன் மனைவியாம் சீதையின் கற்பை பற்றி, ஒழுக்கத்தைப் பற்றி இவ்வாறு ஐயுறுவானாகில் பிறர் கூற வேண்டுவது யாது உளது ?

(தொடரும்)

தொடர்ச்சி...

## மீன்பாடும் தேனாட்டில் பயணியின் பார்வையில்...

### உள்மனயாத்திரையில் இலக்கியம் படைக்கும் உமா வரதராஜன்

நீண்ட இடைவெளிக்குப்பின்னர் 2005 ஆம் ஆண்டு தொடக்கத்தில் இவரை கல்முனையில் சந்தித்தேன். நண்பர் (அமரர்) கவிஞர் சண்முகம் சிவலிங்கம் இவருடைய இல்லத்திற்கு என்னை அழைத்துச்சென்றார்.

இலங்கையில் 1970 காலப்பகுதியில் இவரை இளைஞனாக சந்தித்த பின்னர் 2005 இல் குடும்பஸ்தனாகப்பார்த்தேன். பெரும்பாலான எழுத்தாளர்களின் இளமைப்பராயத்து தொடக்க கால வாசிப்பு அனுபவம் அம்புலிமாமா கதைகளிலிருந்துதான் உருவாகியிருக்கும். அல்லது வீட்டிலிருக்கும் பெரியவர்களிடமிருந்து மகாபாரத - இராமாயணக்கதைகளை கேட்டு வளர்ந்திருப்பார்கள்.

உமா வரதராஜன் தனது பாடசாலைப் பருவத்திலேயே ஜெயகாந்தனின் கதைகளை விரும்பிப்படித்து தனது வாசிப்பு அனுபவத்தை தேர்ச்சியடையச்செய்தவர் என்பதை அறியமுடிந்திருக்கிறது. ஜெயகாந்தனின் முக்கியமான படைப்பு சிலநேரங்களில் சில மனிதர்கள். அதற்கு முன்னர் ஆனந்தவிகடனில் ஜெயகாந்தன் அக்கினிப்பிரவேசம் என்ற தலைப்பில் எழுதிய சிறுகதையின் நாவல் வடிவ நீட்சியாகும்.

அக்கினிப்பிரவேசம் இலக்கிய உலகில் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருக்கிறது. சிலநேரங்களில் சில மனிதர்கள் நாவலுக்கு இந்திய சாகித்திய அகடாமி விருதும் கிடைத்து பின்னர் திரைப்படமாகியது. அதில் கங்கா பாத்திரம் ஏற்று நடித்த நடிகை லட்சுமிக்கு சிறந்த நடிகைக்கான தேசியவிருதும் கிடைத்தது. அந்த நாவலின் அடுத்த பாகமாக கங்கை எங்கே போகிறாள் என்ற பெயரில் விரிந்தது.

இவ்வாறு அக்கினிப்பிரவேசம் இரண்டு நாவல்களாக தொடர்ந்திருப்பது இலக்கிய வரவில் அதிசயமல்ல. ஆனால், தனது 17 வயதில் சிலநேரங்களில் சில மனிதர்கள் நாவலை படித்துவிட்டு தனது வாசிப்பு அனுபவத்தை எழுதியிருப்பவர் உமா வரதராஜன்தான் என்பதே இங்கு வியப்புத்தரும் செய்தி.

அதனை அக்காலப்பகுதியில் தமிழகத்தில் வெளியான தீபம் இலக்கிய இதழ் பிரசுரித்து உமா வரதராஜனை அறிமுகப்படுத்தியிருக்கிறது. தீபம் ஆசிரியர் நா. பார்த்தசாரதி.

உமா வரதராஜனின் "அரசனின் வருகை" புதுடில்லியிலிருந்து வெளிவரும் Little magazine என்ற இதழில் The advent of the king என்ற பெயரிலும், "எலியம்" என்ற கதை A Lankan Mosaic என்ற தொகுப்பில் Rattology என்ற பெயரிலும் "முன் பின் தெரியா நகரில்" என்ற கவிதை கனடாவிலிருந்து வெளிவந்த "In our translated world" என்ற தொகுப்பில் ஆங்கிலத்தில் "Alien city" என்ற பெயரிலும் வெளிவந்துள்ளன. இவருடைய "எலியம் " சிறுகதை பாடசாலைகளில் தரம் 10-11 இற்கான "தமிழ் இலக்கிய நயம் " பாடத் திட்டத்திலும் சேர்த்துக் கொள்ளப்பட்டிருப்பதாக அறியக்கிடைக்கிறது. .இவரது படைப்புமொழியும் கதை சொல்லும் பாங்கும் மிகுந்த கவனத்தைப்பெற்றவை. அதனால் உமா வரதராஜன் இலங்கையிலும் தமிழகத்திலும் புகலிட நாடுகளிலும் நன்கு அறியப்பட்ட பெயர். கிழக்கிலங்கையில் சில கலை இலக்கிய அமைப்புகளிலும் இணைந்திருப்பவர்.

மணிவிழாக்காலத்தையும் கடந்திருக்கும் இவரை அரங்கம் வாயிலாக வாழ்த்துகின்றேன்.

தொடர்ச்சி...

## வடபுலத்துப் பெண்ணின் பார்வையில் மட்டக்களப்பார் - 30

எதிரிகளால் கௌரவிக்கப்பட்டாலும் தன்னளவில் மிக மோசமாக மக்களால் அவமதிக்கப்படுபவராகவே உள்ளார். அவருடைய சிந்தனைகள் செயல்கள் அதன் வீரம் அதனால் பெற்ற வெற்றிகள் , அனைத்துமே புயலில் அகப்பட்ட தூசிபோல மறைந்து போனது. ஒருகணம் அவர் பெயரை பயபக்தியுடன் உச்சரித்தவர்களும் காக்கை வன்னியா எட்டப்பா என விழிப்பதை வேதனையோடு செவிமடுக்கவேண்டியதாயிற்று.

இரண்டாயிரத்து நாலாம் ஆண்டு அந்தச் செய்தியை ஒரு நண்பர் என்னிடம் தெரிவித்தபோது, 'ஒருக்காலும் இருக்காது' என்று சூழுரைத்த நான் மாலையில் செய்வதறியாது திகைத்து நின்றேன். இனி என்னவாகும் என்ற எண்ணம் எம்மை அலைக்கழித்ததற்குப்பதில் வடக்கைச் சேர்ந்த போராளிகள் கொல்லப்படும் செய்தியே வேதனையை தந்தது. பலர் தந்திரமாக கொழும்புக்கு தப்பியோடி அங்கிருந்து வன்னிக்கு வந்தனர். சிலர் வழியிலேயே அகப்பட்டு மாண்டனர். மட்டக்களப்பைசேர்ந்த போராளிகளே அநேகர் தப்பியோடி வன்னிக்கு வந்தனர், பெண்போராளிகள் நிர்க்கதியாக விடப்பட்டனர். இயக்கத்தலைவரின் படங்கள் எரிக்கப்பட்டு அவமதிக்கப்பட்டதை நாம் தொலைக்காட்சிகளில் பார்த்தோம். இன்னும் தமது தாயகம் திரும்ப முடியாத, விரும்பாதவர்கள் கூட இதை சரியென ஏற்றுக் கொள்ளவில்லை. ஆசையின் விளைவேயன்றி வேறென்ன. அரசியல் தூ துக்குழுவுடன் தாய்வானுக்கு போனபோதே அவர் விலையாகிவிட்டார் என பேசிக் கொண்டார்கள். எது எப்படியோ எல்லாம் முடிந்தது. கோவில் சிலையொன்று குப்பைக்குள் வீழ்ந்தது அது இருந்த கோவிலும் இடிந்தே மறைந்தது.

தொடர்ச்சி...

## அபிவிருத்திக்காக ஏங்கும் திருக்கோவில் ஆதார வைத்தியசாலை!




வைத்தியசாலையாக தரமுயர்த்தப்பட்டது. அதனைத்தொடர்ந்து அவசரசிகிச்சைப்பிரிவு திறக்கப்பட்டது. ஆனால் அடிப்படைவசதிகள் உட்கட்டுமானப்பணிகள் நடைபெறவில்லை. ஆதலால் அங்குள்ள மக்கள் இவ்வவைத்தியசாலை அபிவிருத்தி செய்யப்படவேண்டுமென இருதடவைகள் ஆர்ப்பாட்டம் நடாத்தியிருந்தனர். அண்மையில் உரிய வசதியின்றி ஒரு நோயாளி பலியாகியதைத் தொடர்ந்து மக்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர். அடிக்கடி ஆர்ப்பாட்டம் செய்திருப்பதனால் இவ்வைத்தியசாலை அபிவிருத்தி செய்யப்படவேண்டியது அவசியம்' என்றார்.

இவ்வாறு ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், அரைமணிநேரம் இப்பிரச்சினை இழுபட்டதைக்கண்டு அமைச்சர் தயாகமகே தலையிட்டு அந்த உட்கட்டுமானப்பணிகளுக்கு எவ்வளவு தேவை ? எனகேட்டார். அதற்கு 30மில்லியன் ருபா என பிரதேசசெயலாளர் சிவ.ஜெகராஜன் பதிலளித்தார்.

சரி.அதனை நான் தருகிறேன். எதிர்வரும் டிசம்பர் மாதத்திற்குள் அந்த வேலைகளைச் செய்துமுடியுங்கள். என்று கூறி பிரச்சினைக்கு முற்றுப்புள்ளிவைத்தார். இப்போதைக்கு இதுதான் நிலை.











Printed and Published by Arangam News (Pvt)Ltd No 227 Bar Road Batticaloa